1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

77-ம் புத்தகம் 26-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு ஆடிமாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## மொழி பெயர்ப்புக் கலை

அ. க. சுப்பிரமணியன்

"சென்றிடுவீர்! எட்டுத்திக்கும்
கலைச்செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்றார் தமிழனின் எதிர்கால முன்னேற்றத்தை மனக்கண் முன்கண்ட பாரதியார். எட்டுத்திக்கிலுமுள்ள மட்டில்லாக் கலைச்செல்வங்களைத் தமிழன் கொண்டுவந்து சேர்ப்பதோடு நிற்கவொண்ணாது என்பது எங்கள் கல்விச்சக்கரவர்த்தியின் கட்டளை. அச்செல்வங்களை அவரவர் அனுபவிப்பதோடு நிற்கவொண்ணாது. பின் கறையான் அரிக்க விடக்கூடாது என்பதைக் கருதிய தமிழ் அண்ணல்,

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"

என்று தமிழ் எழுத்தாளருக்குக் கற்பித்தார். ஆம், தமிழ்நாடு செழிக்க, தமிழகம் புதுமைப் பொலிவுடன் விளங்க, தமிழன் தமிழனாகவாழத் தமிழ்புதுமணம் பெறவேண்டும். தமிழ்என்னும் மலர்ச்செடிமீது "பிறநாட்டுநல்லறிஞர் சாத்திரங்கள்" என்னும்காற்று வீசவேண்டும். காற்றின்சீவசக்தியைச் செடி உட்கொள்ளவேண்டும். அதன்பயனாகச் செழித்த நறுமலர்களை அது பூக்கும். அந்தமலர்களினின்றும் பிறக்கும்மந்தமாருதத்துடன்சேர்ந்து உலகக்கலை வளர்ச்சியில் உற்சாகமூட்டும். எட்டுத்திக்கிலுமுள்ள கலைச்செல்வங்களை இங்கே கொண்டுவந்து நம் தமிழ்மொழியிற் பெயர்த்து, அதன்மூலம் நம்தமிழன்னை வீற்றிருக்கும் கலைக்கோவிலைப் புனருத்தாரணம் செய்யும் நற்பணியில் ஈடுபட்டிருப்பவர்களே நம்தமிழ்இனத்து மொழிபெயர்ப்பாளர். அவர்கள் ஆக்கக்கலைஞர்கள்.

மொழிபெயர்ப்பு ஒரு தனிக்கலை. பரந்துவிரிந்தஉலகத்தை ஒன்றுசேர்த்து "ஒன்றேதெய்வம், ஒன்றேஉலகம், ஒன்றேகுலம்" என்ற கொள்கையை நிலைநாட்டி மொழிவேற்றுமை, இடவேற்றுமை, இனவேற்றுமை ஆகியவற்றை மறைத்து வேற்றுமையில்ஒற்றுமைகாணும் மனிதசமுதாயத்தை ஆக்குவது மொழிபெயர்ப்புக்கலை.

மொழிஎன்றால் என்ன? ஒருவர் தமது கருத்தை வெளிதிறந்து கூறுதற்குச் சாதகமாக உள்ளதுவே மொழி. எனவே, மொழிபெயர்ப் பென்பது தன்னினத்தைச் சேராத இன்னொருவரின் கருத்தைத் தன்னவரின்மொழியில் எடுத்துக் காட்டும் வழியாகும்........

மொழிபெயர்ப் பென்பது கருத்துப்பெயர்ப்புடன் மாத்திரம் நிற்காது. அந்த அந்த உணர்ச்சியைப் பிரதிபலித்துக் காட்டுவதாகவும் இருக்கவேண்டும். மொழிபெயர்ப்புக்கு மிகமிகஇன்றியமையாதது உணர்ச்சி. ஒருகிரந்தத்தினை ஆக்குவதில் அதன் மூலகர்த்தா எத்தகையஉணர்ச்சியைக் கொண்டிருந்தாரோ அத்தகையஉணர்ச்சியினை மொழிபெயர்ப்பாளரும் கொண்டு தம் மொழிபெயர்ப்பினைச் செய்தல்வேண்டும். மொழிபெயர்ப்பில் ஈடுபடுபவர்தான் ஒரு மொழிபெயர்ப்பாளர் என்பதனை முற்றாக மறந்துவிட்டுத் தான் தான் மூலகிரந்தத்தின் கர்த்தா, அதனை இன்னொருமொழியில் திருப்பி எழுதுவதாகத் தன்னை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

மொழிபெயர்ப்பாளர் அவதானிக்கவேண்டிய இன்னொரு சங்கதி உண்டு. ஒரு வேற்று மொழிக் கிரந்தத்தை—அதுகத்தியமாயினுமாக, பத்தியமாயினுமாக— மொழிபெயர்ப்பாளர் எந்தமக்களின் நன்மையின் பொருட்டும், உபயோகத்தின் பொருட்டும் பெயர்க்கின்றாரோ அம்மக்களின் பண்பாடு அல்லது சால்புக்கிணங்க அது இருக்கத் தக்கதாக அவர் அதனை ஆக்குதல்வேண்டும். இதில் விவிலிய வேதம் எமக்குத் தக்கஒருமுன்மாதிரியாக விளங்குகிறது. உலகின்கண்உள்ள நூல்களில் விவிலியநூலைப்போல் உலகமொழிகள் அனைத்திலும் அழகாக மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் பிறிதொன்றில்லையெனலாம். அந்நூலைத் தமிழில்மொழிபெயர்த்த பழைய கிறித்துவப் பாதிரிமாரும், தமிழ்அறிஞரும்,

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## கம்யூனிஸமும் கிறீஸ்தவமும்

கம்யூனிஸம்என்றால் என்ன? தேர்தல்களின்போது கம்யூனிஸ்த அபேட்சகர்களுக்கு வோட் அளித்தவர்களைக் கேட்டால், "கம்யூனிஸ்த கட்சிஒன்றேதொழிலாளிகளின் நலன்களைப் பாதுகாக்க முன்வந்துள்ள கட்சி" என்று ஏறக்குறைய எல்லோரும் பதில்அளிப்பார்கள். இவர்களுள் முக்கால்வாசிப்பேர் எதார்த்தமாகவே அந்தப்பதிலை அளிக்கின்றனர் என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனால், அவர்கள் இத்தகைய பதிலை அளிப்பதற்கு, அவர்கள் கம்யூனிஸ்த கட்சியைப்பற்றி அவ்வளவு நல்லஅபிப்பிராயம் கொண்டிருப்பதற்குக் காரணம் பிரசாரமே. உண்மையில் கம்யூனிஸ்தகட்சி தொழிலாளிக்கு நன்மைசெய்வதில்லை.

"கம்யூனிஸ்தர்கள் நல்லனவும், எல்லோராலும் விரும்பத்தக்கனவுமானநோக்கங்களையே தாங்களும்கொண்டிருப்பதாக நடித்துத் தங்கள் உட்கருத்தை மறைத்துவைத்து, பல்வேறு கபடசூழ்ச்சிகளால் மக்களைமயக்கித் தங்கள்வலையில் இழுத்துக் கொள்ளத் தேடுகின்றனர்." (1)

கம்யூனிஸம் துன்பத்தில் ஆழ்ந்திருப்பவர்களின் குமுறலும், இம்சிக்கப்படுகிறவர்களின் எதிர்ப்பும் மட்டுமல்ல. அதைக் காட்டிலும் அதிகமுக்கியமான விஷயங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பது கம்யூனிஸம். கம்யூனிஸம் என்பது துன்பப்படுகிறவர்களின் அழுகைக்குரலே என்றால், நாமும் அந்தஅழுகைக் குரலோடு ஒத்து அழுவோம். மனிதன் பாக்கியவானாக இருக்கவேண்டுமென்பதையே கம்யூனிஸம் விரும்புவதாயிருந்தால், அதில்தவறுஒன்றுமில்லை. மனிதன் பாக்கியசாலியாக இருக்கவேண்டுமென்பதை நம்மைவிடஅதிகமாக விரும்புகிறவர் வேறுயார் உளர்?

கம்யூனிஸத்தின் முதல்நோக்கம் என்ன? அதன்நோக்கம் முதலாளித்துவத்தை ஒழித்துவிடவேண்டும் என்பதா? சுகவாழ்க்கைநடத்தும் பணக்காரக் கும்பலைக் கவிழ்த்துவிடவேண்டும்என்பதா? பாட்டாளிவர்க்கத்தின் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதா? ஆம், இந்த நோக்கங்களெல்லாம் கம்யூனிஸ்த வேலைத்திட்டத்தில்அடங்கியவைதான். ஆனால், எல்லாவற்றையும்விட,

### கம்யூனிஸம் கடவுளை எதிர்க்கிறது

அது தனது கொள்கையிலும், தனது அடிப்படைத் தன்மையிலும் நாஸ்திகமயமாய் இருக்கிறது. அதைக்கம்யூனிஸ்தர்கள் சாதாரணமாக மறைப்பதுமில்லை. சிற்சில சமயங்களில் மட்டுமே ஏதாவதொருகுறித்த ஏமாற்றுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தங்கள் நாஸ்திகத்தை ஒருவாறு மறைத்து வைக்கிறார்கள். அவர்களின் நாஸ்திகம் முரட்டுத்தனமுடையதாகவும், பலாத்காரத்தைக் கையாளுவதாகவும் இருக்கிறது. கம்யூனிஸம் கடவுளை எதிர்த்துநிற்கிறது.

கம்யூனிஸம் என்ன சொல்லுகிறது, என்னசெய்கிறது என்பதைச் சற்றுக்கவனிப்போம். கம்யூனிஸம் என்ன சொல்லுகிறது? "மார்க்ஸியம் லோகாயதத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.... மதம்மக்களுக்கு அபின். மதம் ஒரு போதையளிக்கும் திராவகம். இந்தத்திராவகத்தில் அடிமைகள் தங்கள் மனிதத்தன்மையை மூழ்கடித்துவிடுகின்றார்கள். மனிதத் தன்மைக்குப் பொருந்தாத மிகக்கேவலமான நிலைமையைப்பலர் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளுவதற்குக் காரணம், அவர்கள் மதம்எனும் மயக்கத்திராவகக்கடலில் மூழ்கியிருப்பதுதான்." (2)

மேற்சொல்லியவற்றைப் போன்ற மற்றும்பலகூற்றுகளை எடுத்துக்காட்டலாம். ஆனால், அதனால் என்னபயன் உண்டாகக்கூடும்? கம்யூனிஸம் கடவுளை மறுக்கிறது; மனிதனுக்கு அழிவில்லாதஆத்துமம் உண்டுஎன்பதை மறுக்கிறது; மோட்சம், நரகம், தேவசுதனின் மனித அவதாரம், மனுக்குலத்தின் இரட்சணியம் ஆகியவற்றை

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

தார்பு-லூர்து மேற்றிராணியாராகிய மகாவந். தெயாஸ் ஆண்டவரவர்கள் விடுத்த நிருபத்தின் சாரம்.

(1) 'திவினி ரெதெம்ப்தோரிஸ்' என்ற பதினொராம் பத்திநாதரின் நிருபம்.

(2) லெனின் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் நிரபராதி

பிரான்சுக்காரருக்குச் சொந்தமானது சாத்தான்தீவு. ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட பெருங்குற்றவாளிகளைப் பிரான்சுக்காரர் இந்தத்தீவுக்குத்தான் அனுப்புவது வழக்கம். கொலை செய்தவர்கள், பலதடவை கன்னம் வைத்தவர்கள், கொள்ளைக் கூட்டங்களை நடத்தியவர்கள்—இவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒருதீவு—இந்தியாவுக்கு அந்தமான்போல்.

சாத்தான்தீவு பொருத்தமான பெயர்! அத்தீவிலே ஒரு பகுதியில் சீவியபரியந்த சிறைத்தண்டனைபெற்ற கைதிகள் காவலில்வைக்கப் பட்டிருக்தார்கள். மற்றொருபகுதியில் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்ட பிரான்சுக்காரர்கள்—அதுகாரணத்தால் தேசத்தைவிட்டுக் கடத்தப்பட்டு இத்தீவில் பலவந்தமாகக் குடியேற்றப்பட்டவர்கள்—வாழ்ந்துவந்தனர்.

பிரான்சிலிருந்து மாதமொருமுறை ஒருகப்பல் சாத்தான்தீவுக்குச் செல்லும். அதிலிருந்து குற்றவாளிகளும், குஷ்டரோகிகளும் இறக்கப்படுவார்கள். ஒருநாள் அதுமாதிரியான கப்பல் ஒன்று அத்தீவுக்கு வந்துசேர்ந்தது. அன்று கப்பலிலே வந்தவர்களில் ஒரு குருவானவரும் இருந்தார். அவர் பெயர் பீற்றர் சுவாமியார்.

பீற்றர் சுவாமியாரை அக்கப்பலில் அவரோடுவந்த மற்றக்கைதிகள்தானும் விஷத்தைப்போல் வெறுத்தார்கள். கொலையாளிகள்தானும் அருவருப்போடு அவரை நோக்கினர்கள். எல்லோருமே அவரிடம்நெருங்க, பேச, பழகப் பயந்தார்கள். கிராதகர்களும் அவரை வெறுத்ததற்குக் காரணம் இல்லாமலில்லை. கொலைக்குற்றம் சாட்டப்பட்டுச் சாத்தான்தீவுக்குச் சீவபரியந்த சிறைத்தண்டனை அனுபவிக்கவே அந்தக்குருவானவர் வந்திருந்தார்.

ஒரு குருவானவர் — பாவசங்கீர்த்தனத்தைத்தவிர மற்றெந்தவிதத்திலும் பாவத்தோடு தொடர்புஇல்லாமல்—மாசற்ற செம்மறிப்புருவையைப்போல இருக்கவேண்டியவர்—கொலைக்குற்றம் சாட்டப்பட்டு, அது ருசுப்படுத்தப்பட்டு, ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டவர். அவரைக்கண்டதே மற்றக்கைதிகளுக்குக் கடுநாற்றமாய் இருந்ததில் ஆச்சரியமில்லை.

வண. பீற்றர் சுவாமியார் பிரான்ஸ் தேசத்தில் ஒரு சிறியகிராமத்தின் பங்குக்குருவானவர். பங்குச்சனங்களின் நன்மதிப்பைப்பெற்றவர். ஆத்தும இரட்சணிய அலுவலுக்காக ஓயாது இரவும்பகலும் உழைத்தவர். அனாதைகளின் ஆதரவாளர், ஏழைஎளியவர்கள், நோயாளிகள், ஆதரவற்றவர்களுக்கு ஆறுதல்தந்து மக்களால் பெரிதும் போற்றப்பட்டவர்.

அவருடைய அறைவீட்டுக்குச் சற்றுத்தூரத்தில் இருந்தது ஒரு விதவையின்வீடு. அவளுக்குச் சுமார் 60 வயதிருக்கும். நல்ல கத்தோலிக்கபெண்மணி. அவளுக்கு நிறையச்சொத்து இருந்தது. ஆனல், பந்துக்கள் யாருமில்லை. சுவாமியாரைத்தவிர அநேகமாக யாரும் அவள்வீட்டிற்குப் போவதுகிடையாது. அவரைத் தன்சொந்த மகனைப்போலவே அவளும் நேசித்து வந்தாள்.

ஒருநாள் காலை. முந்தின இரவெல்லாம் மழை பெய்துகொண்டிருந்தது. வழக்கம்போல் காலையில் வேலைக்காரி அந்தவிதவையின் வீட்டிற்குள் சென்றுள். கதவைத்திறந்ததும் எசமானியைக்கண்டாள் பிணமாக. இரத்தம் தோய்ந்ததரையில் பிணமாகக் கிடந்தாள் எசமானி—அவள் உடுப்புகள் கிழிந்திருந்தன. உயிருக்காக எதிரியுடன் கடும்போராட்டம் நடந்திருக்க வேண்டும் என்பதைநிரூபித்தன அங்கு காணப்பட்ட அறிகுறிகள். பொலிசர் சீக்கிரம் வந்தார்கள். கொலைசெய்த பாதகனைக் கண்டுபிடிப்பது எளிதில் முடிந்தது.

மழைகாரணமாக ஈரமாயிருந்ததரையில் கொலைசெய்ய வந்தவனின் சப்பாத்துக் காலடிச்சுவடுகள் ஆழமாய்ப் பதிந்திருந்தன. அந்தக்காலடிச்சுவடுகள் விதவையின் வீட்டிலிருந்து நேரே சுவாமியாரின் அறைவீட்டுக்குச்சென்றன. பொலிசர் அங்குசென்றனர். கோவிலில் குருவானவர் திவ்வியபலி பூசை செய்துகொண்டிருந்தார். அறைவீட்டைச்சுற்றிச் சோதனைநடந்தது. தோட்டத்திலே ஓரிடத்தில் இரத்தக் கறைபிடித்த ஒரு அங்கியும், சேறுபட்ட சப்பாத்துகளும் புதைக்கப்பட்டிருந்தது, கண்டுபிடிக்கப்பட்டது. அவைகள் சுவாமியாருடையவைகளே. அவருடைய சப்பாத்துகளின் அளவும், கொலையாளியின் காலடிச்சுவடுகளும் ஒன்றுகவேஇருந்தன.

பூசைமுடிந்து குருவானவர் வெளியேவந்தார். காத்துக்கொண்டிருந்தனர் காவலர்கள் — வரவேற்பதற்கு — கைவிலங்கோடு. குருவானவர் குற்றவாளி என்பதற்குச் சாட்சிகளே தேவையில்லை என்று கருதப்பட்டது. விசாரணை நடந்தது.

“நீ குற்றவாளியா இல்லையா ?”

“கடவுள் முன்னிலையில் நான் நிரபராதி. ஒரு பாவமும் அறியாதவன்.” இதைத்தவிர வேறொன்றும்கூற மறுத்தார் குருவானவர்.

அரசினர்தரப்பில் வாதாடினுர் நியாயவாதி. “கொலையுண்ட விதவைக்குச் சுவாமியார் மிகவும்வேண்டியவர். அவளுடையஉயிலில் தன்சொத்தையெல்லாம் அவருக்கே எழுதிவைத்திருக்கிறுள் என்பது இப்பொழுது வெளியாகியிருக்கிறது. அவரைத்தவிர வேறுயாரும் அவள் வீட்டிற்குப்போவது கிடையாது. வேறுயாராயிருந்தாலும் அவள் கதவைத் திறக்க மாட்டாள். சுவாமியாரைக்கண்டதும் தான் கதவைத்திறந்திருக்கிறுள்.

“அவள் தன்சொத்தை அவருக்கே உயிலில்எழுதி வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கவேண்டும். அவள் இறக்கும்வரை காத்திருக்கமுடியாமல் அவளைக் கொன்றுவிட்டுச் சீக்கிரம் சொத்தைப்பெறவேண்டும் என்றநோக்கத்தோடு சுவாமியார் இந்தக்கொலையைச் செய்திருக்கிறுர்.

“இரத்தக்கறைபட்ட அங்கி—சேறுபட்ட சப்பாத்துகள் — காலடிச்சுவடுகள்— தான் நிரபராதிஎன்று நிரூபிக்க மறுக்கும் சுவாமியாரின் பிடிவாதம்—இவைகளே அவர் செய்தகொலைக்குச் சாட்சிகள்.”

வாதம்முடிந்தது. ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. அப்பொழுதும் தான் குற்றவாளியல்லஎன்று நிரூபிப்பதற்கு யாதொருஎதிர்வாதமும் சுவாமியார் பேசவில்லை.

* * *

வண. பீற்றர் சுவாமியார் சாத்தான் தீவு கொண்டுபோய்ச்சேர்க்கப்பட்டார். மற்றக்கைதிகளோடு கல்உடைக்கவும், மற்றும் கடினவேலைகள் செய்யவும் அவருக்குக் கட்டளையிடப்பட்டது. சுவாமியார் நல்ல பலசாலி. தேகாரோக்கியமுடையவர். தமக்கு இடப்பட்டவேலையைச் சீக்கிரமாகச் சிரமமில்லாமல் முடித்துவிடுவார்.—ஆனுல், வேலைமுடிந்ததும் அவர் ஓய்வெடுப்பது கிடையாது. தங்களுக்குக் குறிக்கப்பட்டவேலையைச் செய்துமுடிக்கத்திணறும் பலவீனர்களாயிருந்த மற்றக்கைதிகளுக்குத் தமது ஓழிந்தநேரத்தில் உதவிசெய்வார்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

பேராசிரியர் :
**A. இருதயராஜ், M. A.—ச. போ.**

# சுதேச வர்த்தமானம்

## ஆசிரியர் குறிப்பு

“உதயதாரகை”யிலே “டேமியன் பாதிரியாரின் திருப்பணி” எனும் தலையங்கத்தின்கீழ் வெளிவந்த கட்டுரையிலே குறிக்கப்படுகிறவர், கத்தோலிக்க உலகமுழுவதிலும் “குஷ்டரோகர்களின் அப்போஸ்தல”ரெனப் பெயர் விளங்கும் ஆசா. தமியான் சுவாமியவர்களே. இவர் ஓர் பாதிரியார் அன்று. ஓர் கத்தோலிக்க குருவானவரே. இவரது திருப்பணியைப்பற்றிய கட்டுரையை வரைந்தவர் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின்கீழ் பணியாற்றி வரும் திரு. டி. ஆர். அம்பலவாணர் அவர்களேயெனத் “தாரகை” ஆசிரியர் தெரிவிக்கின்றுர். யாழ்ப்பாணத்திலே மேலைநாட்டுப் புரொட்டஸ்தாந்த மிஷனரிமாரைப் பாதிரிமாரென்றும், கத்தோலிக்க மிஷனரிமாரைக் குருமார், சுவாமிமார் என்றும் அன்றுதொட்டுக் கிறீஸ்தவர்கள்மாத்திரமல்ல, பிறசமயிகளும் அழைப்பது வழக்கமாகும்.

## சிறைச்சாலைத் தரிசனை

கொழும்பு அதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய தோமஸ் குரே ஆண்டவர் சென்றவியாழக்கிழமை காலை நீர்கொழும்புச் சிறைச்சாலையைத்தரிசித்து, அங்குள்ள சிற்றலயத்தில் திவ்வியபூசை நிறைவேற்றியபின்னர் 40 பேருக்கு உறுதிப்பூசுதல்செய்தனர். உறுதிப்பூசுதல் செய்யப்பெற்றவர்களில் அதிகமானேர் மறியற்காரரே. ஏனையசிலர் சிறைச்சாலை அதிகாரிகளின்பிள்ளைகள். அதன்மேல் கத்தோலிக்க மறியற்காரர்ஒருவர் அங்குள்ள கத்தோலிக்க மறியற்காரர்பேரால் அதிமேற்றிராணியாருக்கு அழகிய சித்திரவேலைப்பாடுடையதாய்ப் பிறேமிடப்பட்ட உபசாரப்பத்திரம் ஒன்று படித்துக்கொடுத்துத் திருச்சபையின்மட்டிலே தங்களுக்குள்ள விசுவாசபிரமாணிக்கத்தைத் தெரிவித்தனர். புத்தரான மறியற்காரர்ஒருவர் ஆண்டவர்அவர்களுக்கு நன்றிதெரிவிக்கவே அவர் பதில்நன்றி கூறி அவருடன்கைகுலுக்கினர்.

## யாது சொல்லுகின்றர் ?

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக்கல்லூரிஅதிபரான கனம். பங்கர்அவர்கள் தமதுபாரியாருடன் அமெரிக்கஐக்கிய தேசத்தில் ஓராண்டு விடுமுறையைக் கழித்துக்கொண்டு சமீபத்தில் யாழ்ப்பாணம்வந்து சேர்லாயினர். இவர் அமெரிக்கஜனதிபதித் தேர்தல்விஷயமாய் அபிப்பிராயந்தெரிவித்தபோது: ஜெனறல் ஈசன்ஹோவர்அவர்கள் சந்தேகமறப் பொதுசனஆதரவைக் கொண்டிருக்கிறுர்; ஆனுல், அவர் குடியரசுஅரசியலுக்குப் புதியவர், மறுபக்கத்திலே திரு. ராவ்ற்அவர்கள் குடியரசுக்கட்சியின் பிரதானஆதரவாளர்; அவர் தேர்தல்அபேட்சகராக நியமனஞ்செய்யப்படலாம்; ஆனுல், ஜனதிபதித்தேர்தலில் தோல்வியடைவர்; நியமனபோட்டியிலே ஈசன்ஹோவர் வெற்றிபெறமுடியுமானுல் இவரே அடுத்தஜனதிபதியாவார்எனத் தெரிவித்திருக்கின்றுர்.

## புதிய நீதியரசர்கள்

திரு. என். கே. சொக்ஸி அவர்களின் இராசினாமாவாலும், டக்ரர் ஆர். எவ். டயஸ்அவர்களின் மரணத்தாலும் சுப்பிறீங்கோட்டு நீதியரசர்களின் காலியாயிருக்கும் ஸ்தானங்களுக்கு நீதிமந்திரிகாரியாலய நிரந்தரகாரியதரிசியான திரு. ஆர். ஆர். செல்லத்துரைஅவர்களும், ஐக்றிங்சொலிசிற்றர்—ஜெனறலான திரு. எச். டபிள்யு. ஆர். வீரசூரியஅவர்களும் நியமனஞ்செய்யப்படுவார்களெனப்போல் தெரியவருகிறது.

## அனுராசபுர ஆகாயப்பிரயாணம்

புத்தசமய யாத்திரிகர்களும், உல்லாசப்பிரயாணிகளும் அதிகம்விரைவிலே ஆகாயவிமானத்தில் அனுராசபுரஞ்சென்று அங்கு புதியபட்டினத்தின் எல்லைக்குவெளியே ஒருமைல் தூரத்தில் அமைக்கப்படவிருக்கும் ஆகாயவிமானநிலையத்தில் இனிமேல் இறங்கக்கூடியோராவார்கள். விமான நிலையத்துக்குத் தகுந்த இடமாகக் கும்பிசங்குளம் தெரியப்பட்டிருக்கிறது. அங்குள்ளநிலம் கண்ணுக்கெட்டிய தூரம்வரையில் தட்டையாய் இருக்கின்றது.

## உன்னிச்சைக் குடியேற்றம்

மட்டக்களப்பிலே இற்றைக்குச் சுமார் நான்குவருடங்களின்முன் தொடக்கப்பட்ட உன்னிச்சைக்குடியேற்றதிட்டம் தீவிரவிருத்தியடைந்து, அங்கு உன்னிச்சையிலும், கரடியனுற்றிலும் ஓர்காலம் காட்டுமிருகங்களின் உறைவிடமாயிருந்த காடுகளெல்லாம் இன்று பசியநெற்கழனிகளாகக் காட்சியளிக்கின்றன. இந்தத்திட்டமானது மட்டக்களப்புப்பிரிவிலே காணியற்றிருக்கும் 325 கிராமக்குடும்பங்களைக் கொண்டுபோய்க் குடியேற்றுதற்கென நிர்மாணிக்கப்பட்டது. கல்லோயாவுக்குஇரண்டாவதான மிகப்பெரியதிட்டம் இதுவாகும். இது முற்றுகப் பூர்த்தியடையுமிடத்து 1,500 ஏக்கர் காட்டுநிலம் கமத்தொழிலுக்குள்ளாகும். 500 குடும்பங்கள் வீடுகட்டிக் குடியிருக்கவசதியான 2,000 ஏக்கர் மேட்டுநிலத்தையும் கொண்டதாயிருக்கும்.

## தேனீக்களின் பிரயாணம்

இரத்மலானையிலிருந்து சென்ற புதன்கிழமை பிரித்தானிக்குச்சென்ற ஏயர்சிலோன் ஸ்கைமாஸ்றர் விமானத்திலே 500 தேனீக்கள் வரையில் கொண்டுசெல்லப் படுகின்றன. இவைகள் போதனையிலே அரசாங்க கமத்தொழிற்பகுதியால் அமெரிக்கஐக்கிய தேச கலிபோனிய சர்வகலாசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றன. இவைகள் பிரித்தானியிலிருந்து மற்ருேர் விமானத்திலே அத்திலாந்திக் சமுத்திரத்துக்குமேலாகக் கலிபோனியாவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

## சர்வகலாசாலையும் மாணவிகளும்

இன்னுஞ்சிலவருடங்களிலே இலங்கைச்சர்வகலாசாலையில் மாணவிகள் தொகை மாணவர்தொகையிலும் அதிகரித்துவிடும்போல் இருக்கிறது. சென்றகலாசாலைவருடத்தில் ஒவ்வோர் மாணவிக்கும் நால்வருக்குச் சற்றே கூடியவீதமான மாணவர்கள் இருந்தார்கள். சமீபத்தில்ஆரம்பமான கலாசாலைவருடத்திலே அதில் சேர்ந்தவர்களில் ஒவ்வோர்மாணவிக்கும் இரண்டு பேருக்குச் சற்றேமேற்பட்ட மாணவர்கள்வீதம்தான் இருக்கின்றுர்கள். இம்முறை அதிற்சேர்ந்தவர்களில் மாணவர்கள் 371 பேர். மாணவிகள் 149 பேர். பிரவேசப்பரீட்சைகளில் மாணவரைக் காட்டிலும் மாணவிகளே நன்குஅரங்கேறியிருக்கிறுர்கள்.

## குடிசன மதிப்பு

இலங்கையிலே வருகிற புரட்டாசியில் குடிசனமதிப்பு எடுக்கப்படவிருக்கிறது. அதற்குரியவேலைகள் ஏலவே ஆரம்பமாகிவிட்டன. இந்தக்குடிசன மதிப்பு சென்றவருடம் எடுக்கப்படவிருந்தது. ஆனுல், கடுதாசிப்பஞ்சம் காரணமாகப் பின்போடப்படலாயிற்று. குடிசன மதிப்பு எடுக்கப்பட்டபின் பாராளுமன்றத் தேர்தல்தொகுதிகள் திரும்பவகுக்கப்படும். 1946-ம் ஆண்டு இவைகள்வகுக்கப்பட்டபோது இலங்கைக் குடிசனத்தொகை 66,57,339 பேரென மதிப்பிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### இந்திய முதல் ஆச்சிரமம்

இந்தியாவிலே சேலத்திலிருந்து 50 மைல் தூரத்திலுள்ள "சிலுவைகிரி" எனும் கிராமத்திலே இருகுருமார்உட்பட 31 இந்தியர்கள் ஒன்றுசேர்ந்து இந்தியசெங்கல்கொண்டு தாங்களாகவே கட்டிவேய்ந்த ஆடம்பரமற்ற ஒருசிலகட்டடங்களில் முதலாவது இந்தியஆசீர்வாதப்பர் சந்நியாசஆச்சிரமத்தை அமைத்திருக்கின்ருர்கள். இந்துச்சந்நியாச வாழ்க்கையிலே கிறீஸ்து சமயத்திற்கு ஒத்துப்போகக்கூடிய சகலத்தையும் கைக்கொண்டு கிறீஸ்தவமயமாக்கி இந்தியாவின் ஆத்மீகபாரம்பரியங்களைப் பின்பற்றி ஒழுகுவதே இவர்களின் லட்சியமாகும். இந்தச்சந்நியாசிகள் உணவுவிஷயமாய் இந்தியசந்நியாசிகளின் தாவரபோசனத்தையும், உடைவிஷயமாய் அவர்களின் காவி உடையையும் கைக்கொண்டிருக்கிருர்கள். மாமிசம், மச்சம், முட்டை, மதுபானம் ஆகியவற்றைத் தள்ளிவிட்டிருக்கிருர்கள். இந்தியவழக்கத்தைப் பின்பற்றித் தங்கள் விரல்களாலேயே இவர்கள் சாப்படுகின்ருர்கள். கோவிலிலுள்ள பாடகர்மண்டபத்திலே தனியாசனங்களோ அன்றேல் நீண்டஆசனங்களோ போடப்பட்டில்லை. எல்லோரும் நிலத்தில் உட்கார்ந்தே "ஒவ்விஸ்" செபத்தைப் பாடுகின்ருர்கள். தங்கள் சொந்தக்கையால் வேலைசெய்தே சீவனம்பண்ணுகிருர்கள். இந்தஆச்சிரமத்தை ஸ்தாபிப்பதற்கான முதல் நடவடிக்கை இற்றைக்கு ஏறக்குறைய ஐந்துவருஷங்களின் முன் எடுக்கப்படலாயிற்று. அப்போது வண. பிலிப் கைபன்பிளாகல், வண. ஏபிரகாம் கைபன்பிளாகல் எனும் சகோதரரான குருப்பிரசாதிகள் இருவரும் துறவறவாழ்க்கை நடத்துதற்கென்று ஒருதொகையான வாலிபர்களை ஓர் கூட்டமாக ஒன்றுசேர்த்தார்கள். 1950-ம் ஆண்டு வண. பிலிப் சுவாமியாரும், அவர்களில் ஐவரும் நவசந்நியாசஞ் செய்வதற்காக பெல்ஜியதேச புறூஜெஸ் நகரிலுள்ள அர்ச். அந்திரேயாரின் ஆச்சிரமத்திற்குச் சென்ருர்கள். இப்போது பிலிப் சுவாமியாரும், அவரோடு சென்றவர்களும் இந்தியாவுக்குத் திரும்பிவந்ததும் அதிகாரமுறையிலே நவசந்நியாசம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தச்சந்நியாசர்களில் 19 பேர் குருத்துவபதவிக்கான அபேட்சகர்கள்.

### வீரத்துவ கருதினல்

ஜேர்மனியிலே மியூனிச்நகர் அதிமேற்றிராணியாராய் இருந்துவந்த கருதினல் மிக்கேல் வொன் பவுலாபர் ஆண்டவர் சென்ற ஆனிமாதம் 12-ந்திகதியன்று தமது 83-ம் வயதில் காலஞ்செல்லலாயினர். இவரின் மரணத்தாலே இருபது ஆண்டுகளாகச் சர்வாதிகாரி ஹிற்லரின் கொடுங்கோன்மையை வீராவேசத்துடன் எதிர்த்துநின்று வெற்றிஈட்டிய ஓர் வீரர்திலகம் மறையலாயினர். இவரின்வாழ்க்கையானது சத்தியத்தை நிலைநாட்டிவைக்கப் போராடுகிறவர்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாகவிளங்கி, லட்சக்கணக்கானமக்களின் இதயங்களிலே அஞ்சாமனத்துக்கும், அதிசயத்துக்குரிய தைரியத்துக்கும் ஓர் சின்னமாக இடம்வகித்திருக்கின்றது. ஓர்ரொட்டிக்காரரின் புதல்வரான இவர் முந்தஸ்பேயர்நகர் மேற்றிராணியாராயிருந்து 1917-ம்ஆண்டு மியூனிச்நகர் அதிமேற்றிராணியாராக நியமனஞ்செய்யப்பெற்று ஆறு வருடங்களின்பின் ஓர் கருதினல் ஆக்கப்பெற்றனர். இவரின் மரணத்தோடு கருதினல்மார்திருச்சங்கத்தில் தற்போது 24 ஸ்தானங்கள் காலியாயிருக்கின்றன.

### மெக்சிக்க குருவேதசாட்சி

1927-ம்ஆண்டு சிறுதுப்பாக்கி வீரர் கூட்டம்ஒன்றுலே சுடப்பெற்று வேதசாட்சியான யேசுசபையைச்சேர்ந்த வண. மிக்கேல் புறோ சுவாமியாருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுதற்கான விசாரணையைத் தொடக்குமாறு திருச்சடங்காசாரதிருச்சங்கம் அதிகாரமளித்திருக்கிறது. அப்போது இவர் சுடப்பெற்றமாதிரியை எடுத்துக்காட்டும் பிரதிமைப்படங்கள் மெக்சிக்க அரசாங்கத்தாலே வெளியிடப்படலாயின. அவற்றிலே இவர் சிலுவைமாதிரியாகத் தமதுகரங்களை நீட்டியபடியும், தமதுசெபமாலையைக் கரத்தில்பிடித்தபடியும் துப்பாக்கிவீரர்கூட்டத்தை எதிர்நோக்கியவண்ணம் காணப்படுகின்ருர். அதற்குச் சிலநிமிஷங்களுக்குமுன் இவர் முழந்தாளிட்டுச் செபஞ்செய்துநின்ருர். இவர் மாறுவேடம்பூண்டு, தலைமறைவாக இடத்துக்கிடஞ்சென்று திருத்தொண்டாற்றித் தமது குருத்துவசீவிய முழுவதையும் செலவிடலாயினர்.

### தலையணைக்குப்பதில் சமாதிபெட்டி

அர்ச். சவேரியார் மரணமடைந்தபோது, தலைக்குஅணைத்திருந்த தலையணை தஸ்கனிபிரபுவுக்கு அன்பளிப்பாகக்கொடுபட்டது. மனமுவந்து இதைப்பெற்றுக்கொண்டு, அப்பிரபு அர்ச். சவேரியாரின் திருவுடலைச் சேமித்துவைக்க வெள்ளிகொண்டு மிகவேலைப்பாடுள்ள ஒருபெட்டியைச் செய்வித்துக்கொடுத்தனர். 300 ருத்தல் நிறையுள்ள இந்தப்பெட்டி அழகியசித்திரவேலைகள் நிறைந்து விளங்குகிறது. இது மூன்று அடுக்குகளாய் அமைக்கப்பட்டு, முதல்அடுக்கில் பச்சைக்கற்களும், இரண்டாவதில் சிவப்புக்கற்களும், மூன்ருவதில் வெள்ளைக்கற்களும் பதிக்கப்பட்டுள்ளன. தாஜ்மகாலைஅடுத்து, இந்தச்சமாதிப்பெட்டியைவிடச் சிறந்ததும், நுட்பவேலைப்பாடுள்ளதுமாய் ஆசியாவில் வேறெதுவுமில்லை. மூன்று சாவிகளால் மட்டும் இதைப்பூட்டவும், திறக்கவும்முடியும். கோவைக்கவர்னரிடம் ஒரு சாவியும், கிழக்கிந்தியபத்திரியாக்குவிடம் ஒன்றும், ஆலயபரிபாலகரிடம் மூன்ருவதும்உள்ளன.

## எங்கும் நிறைந்த பரம்பொருள்

— I —

பொங்கும் கடல்புவி தந்தவர்ஆர்? நலன்
பூக்கும பொருள்பல தந்தவர் ஆர்?
எங்கும் நிறைந்த பரம்பொருளே அவர்
இன்மலர்ப் பாதம் தொழுதிடுவோம்.

— II —

சந்திர சூரியர் தந்தவர்ஆர்? பல
தாரகை சீர்பெற வைத்தவர் ஆர்?
அந்தமும் ஆதியும் அற்றவர்ஆர்? எங்கள்
ஆண்டவன் பூம்பதம் வேண்டிடுவோம்.

— III —

உண்ணும் உணவில் இருப்பவர்ஆர்? கணம்
உட்கொள்ளும் காற்றில் இருப்பவர்ஆர்?
கண்ணுள் மணியுள் இருப்பவர்ஆர்? எங்கள்
சத்தனன்ருே தினங் கைதொழுவோம்.

— VI —

புல்லிற் பசுமை கொடுத்தவர்ஆர்? பல
பூவில் மணத்தைக் கொடுத்தவர்ஆர்?
கல்லிற் தவளையைக் காப்பவர்ஆர்? சிறு
கர்ப்பைச் சிசுவையும் பார்ப்பவர்ஆர்?

— V —

உன்னையும் என்னையும் தந்தவர்ஆர்? நமக்
கொன்றும் குறைவின்றிக் காப்பவர்ஆர்?
அன்னையும் தந்தையும் அல்ல; நமதரும்
ஆண்டவன் பூம்பதம் அண்டிடுவோம்.

— VI —

எண்ணிலும் எட்டிலும் என்றும் அடங்காத
எங்கும் நிறைந்த பரம்பொருளை
கண்ணிலும் ஞானக் கருத்திலும் வைத்துநாம்
காலையும் மாலையும் போற்றிடுவோம்.

"ஞானி"


## The 4th Centenary of the death of St. Francis Xavier

## அர்ச். பிரான்சீஸ் சவேரியார் பரமபதம் அடைந்த நான்காம் நூற்ருண்டு விழா

மன்னுரைச்சேர்ந்த தோட்டவெளியிலே இந்த ஆடிமாதம் 12-ந் திகதி சனிக்கிழமை மாலைஆராதனையுடனும், 13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பாடற்பூசையுடனும் பரதகுலக் கிறீஸ்தவர்களால் இந்தநூற்ருண்டுவிழா கொண்டாடப்படும்.

13-ந் திகதிஇரவு "இருசகோதரர்" என்ற நன்மைபயக்கும் நாடகம்ஒன்று பேசாலைவாலிபர்கள் நடிப்பார்கள்.

கட்டளைக்குரவர்
பேசாலை



இந்தியபிரதமர் பண்டிதநேருஅவர்கள் (வலதுபுறம்) ஆட்டுத்தோல்போர்த்த ஓநாயைச் சுட்டிக்காட்டி, "கம்யூனிஸ்தகட்சி தனதுவேடத்தைப் பலமுறை மாற்றியுள்ளது" எனக் கதவருகிலுள்ள சிறுமியிடம்கூறுகிருர். "சக்கோர்" வரைந்த இக்கேலிச்சித்திரம் சமீபத்தில் பம்பாயிலுள்ள "ஹிந்துஸ்தான்" என்னும் குஜராத்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**ஆடிமாதம் 1952**

| | | | |
|---|---|---|---|
| வெ | 11 | அ. பத்திராதர் | (சி) |
| சனி | 12 | அ. குயல்பேர்த்தருளப்பர் | (வெ) |
| ஞா | 13 | இஸ்பிரீத். ஆகமனத்தின் பின் 6-ம் ஞாயிறு—அ. அனக்கிலேத் தப்பர் | (ப) |
| திங் | 14 | அ. பொனுவெந்தூர் | (வெ) |
| செ | 15 | திருஇரட்சகரின்திருநாள் — அ. என்றீக்கப்பர் | (வெ) |
| புத | 16 | உத்தரியமாதாதிருநாள் | (வெ) |
| வி | 17 | அ. அலெக்சியார் | (வெ) |


# சத்தியவேத பாதுகாவலன்

1952-ம் ஆண்டு

ஆடி மாதம் 10-ந் திகதி


## சதா சகாயமாதா

—:—

II

பதினைந்தாம் நூற்றாண்டிலே கிறீற்தீவில் வசித்திருந்த பெரும் பக்திமானான கத்தோலிக்க வர்த்தகர் ஒருவர் தாம் வைத்திருந்த இந்த அருமையான படத்தைத் தம்முடன் எடுத்துக்கொண்டு தேவாதீனமாக ரோமாபுரிசென்றார். சென்றதும் ஆபத்தான நோய்கண்டு வருந்தினர். தமது அந்தியவேளை அண்மிவருவதாக உணர்ந்தார். அப்போது தம்மைச்சூழ நின்றாருக்கெல்லாம் இந்தத்திருப்படத்தின் அற்புதவரலாற்றை எடுத்துரைத்தார். தாம்மரணமானதும் அதனை ஓர் கோவிலிலே கொண்டுபோய்ப் பூச்சியமாக வைத்துப் பாதுகாத்துவணங்கிப் பக்திசெய்துவருமாறு கேட்டுக்கொண்டார். கடந்த நாலரை நூற்றாண்டுகளாக மகாபூச்சியமாகவைத்துக் காப்பாற்றிப் பூசிக்கப்பெற்றுத் தற்போது ரோமாபுரி அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரின் ஆலயத்தில் இருந்துவருகின்ற அந்தப்படந்தான் அர்ச். சதாசகாய மாதாவின் திருப்படமாகும். இப்படத்தின்மூலமாக எண்ணிறந்தபுதுமைகள் நடைபெற்று வந்தமையாலே அர்ச். சதாசகாய மாதாவின் பக்தியைப்பரப்புமாறு அதைப்போலும் அநேக இலட்சக்கணக்கான படங்கள் அச்சிடப்பெற்றுக் கத்தோலிக்க உலகமுழுவதும் பரப்பப்படலாயின. ஒன்பதாம் பத்திநாத பாப்பானவர் காலத்திலே அர்ச். சதாசகாய மாதா பேரால் விசேஷசெபங்கள் செய்யவும், தனிமையானபூசை செய்து அவர் திருநாளைக் கொண்டாடவும் அனுமதிகிடைக்கலாயிற்று. தற்போது அர்ச். சதாசகாயமாதாவின் அற்புதபடம் இருந்துவருகின்ற அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரின் ஆலயம் திவ்விய இரட்சகர் சபைக் குருமாருக்குச் சேர்ந்ததாகும். அதனல் இவர்கள் அத்திருநாயகியை விசேஷவிதமாகப் பக்திசெய்து வருவதும், அவரின் பக்திவணக்கத்தைப்பரப்ப முயற்சித்துவருவதும் அதிசயமன்று. நிற்க, நமது ஆசனக் கோவிலிலே அர்ச். சதாசகாய மாதாவின் பக்திவணக்கம் இற்றைக்கு மூன்று மாசங்களின் முன் ஆரம்பமாயிற்று. அதிவண. எஸ். பீற்றர் சுவாமியவர்கள் சகாயமாதாபடத்தின் அற்புதவரலாற்றையும், அதன்பக்திவணக்கத்தாலே சதாஅருளப்பட்டுவரும் அளவிறந்த சகாயங்களையும் எடுத்துக்காட்டிப் பக்தியருட்சிக்குரிய ஓர் பிரசங்கஞ் செய்து ஆரம்பித்துவிட்ட இப்பக்தி முயற்சியானது வளர்மதியென்ன வளர்ந்துகொண்டுவரக் காண்பது சந்தோஷமே. தற்போது வியாழக்கிழமைதோறும் மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணப் பட்டணத்தின் நானுவிசாரணைப் பங்குகளிலிருந்தும் ஆடவர்களும் பெண்மணிகளுமாகத் திரளான விசுவாசிக்ள் ஆசனக்கோவிலில் வந்துகூடி, அங்கு ஓர்சிறிய பீடத்தின்மேல் எழுந்தருளச் செய்து பூச்சியமாக வைக்கப்பட்டிருக்கும் அர்ச். சகாயமாதாவின்படத்தைப் புஷ்பங்கள் கொண்டு அலங்கரித்தும், மெழுகுவர்த்திகள்கொண்டு தீபாலங்காரஞ்செய்தும் பூசித்துப்பக்தி பண்ணுகின்றார்கள். விசேஷ செபங்கள்செய்து சகாயமாதாவின்சலிகையை இரந்துகொள்ளுகின்றார்கள். தாங்கள்அடைந்துகொண்ட சகாயங்களுக்காக நன்றிசமர்ப்பிக்கின்றார்கள். பாவாலும் நாவாலும் மாதாவை வாழ்த்திக் கொண்டாடுகின்றார்கள். அவ்வேளை செய்யப்படும் சுருக்கமான பிரசங்கத்தைக் கருத்தாகக்கேட்கின்றார்கள். பின்னர் சுவாமியார்அதற்கென ஓர்விசேஷசெபஞ்செய்து சகலரையும்ஆசீர்வதித்து ஆசிநீர்தெளிக்கின்றார். பின்னர் சகாய மாதாபடங்கொண்டும் சகலரையும் ஆசீர்வதிக்கின்றார். இந்த ஆசீர்வாதங்களிலே பிணியாளரும், சிறுபிள்ளைகளும் விசேஷ பங்குபெறுகின்றார்கள். அதன்மேல் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பெற்று அர்ச். சகாயமாதா பக்திவணக்கம் எல்லாமாக அரைமணிநேரத்திலே பக்திப்பரவசமாக நடந்துமுடிகின்றது.

(வளரும்)

இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்

## 6-ம் ஞாயிறு

**சுவிசேஷ வாசிப்பு**

(மாற்கு 8: 1—9)

அக்காலத்தில்திரளானசனக் கும்பல் இருக்கையில் உண்பதற்கு அவர்களுக்கு ஒன்றுமில்லாதபோது, யேசுநாதர் தம்முடைய சீஷர்களை அழைத்து, அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இந்தச்சனங்கள் மேல் இரக்கமாயிருக்கிறேன். ஏனெனில், இதோ! இவர்கள் இப்போது மூன்று நாளாய் என்னிடத்தில்தங்கி, உண்பதற்கு ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களைத் தங்கள் வீட்டுக்குப் பட்டினியாய் அனுப்புவேனேயாகில்வழியிற்சோர்ந்துபோவார்கள். ஏனென்றால், அவர்களிற் சிலர் தூரத்திலிருந்து வந்திருக்கிறார்கள் என்றார். அவருக்கு மறுமொழியாக அவருடையசீஷர்கள்: வனாந்தரமாகிய இவ்விடத்தில் ஒருவனால் எங்கே இருந்து அப்பங்களைக் கொண்டுவந்து அவர்களைத் திருப்தியாக்கக் கூடும்? என்றார்கள். மீளவும் அவர்: உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டென்று அவர்களைக்கேட்க, அவர்கள்: ஏழு என்றார்கள். அப்போது அவர் தரையிற் பந்திஅமரக்கும்பலுக்குக் கட்டளையிட்டார். அவர் ஏழு அப்பங்களையும் எடுத்து, நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லி அவைகளைப் பிட்டுச் சனத்துக்குப் பரிமாறும்படி தம்முடைய சீஷர்களுக்குக்கொடுத்தார். ஆதலால். அவர்கள் கும்பலுக்குப்பரிமாறினர்கள். அவர்களிடத்தில் சிலசிறுமீன்களும் இருந்தன. அவர் அவைகளையும் ஆசீர்வதித்துப்பரிமாறக் கட்டளையிட்டார். சனங்கள்சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள் மேலும் மீதியான துண்டுகளை ஏழுகூடைகள் நிறையஎடுத்தார்கள். சாப்பிட்டவர்களோவெனில் ஏறக்குறைய நாலாயிம்பேராயிருந்தார்கள். பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## அர்ச். சவேரியாரின் திருமேனிக்காட்சி

இந்துதேச அப்போஸ்தலரும், இறந்தும் இறவாதவர்போல் இன்றைக்குமே தமது புனித உடல் அழியாதிருக்க அற்புத வரம் பெற்றுள்ளவருமான அர்ச். பிரான்சீஸ் சவேரியார் பரமபதமடைந்த நான்காம்நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடுமுகமாகக் கோவைமாநகரிலே இருந்துவருகின்ற அவரின்திருமேனியானது வருகிறமார்கழி மாதம் 2-ந்திகதி முதல் பக்தர்களின் தரிசனைக்கும், வணக்கத்துக்குமாகப் பிரசித்தகாட்சிக்கு வைக்கப்படவிருக்கின்றது. முதனளாகிய மார்கழிமாதம் 1-ந் திகதியன்று பரிசுத்தபாப்பரசரின் பிரதிநிதியான கருதினல் ஆண்டவர் மார்மகோவையில் வந்துசேருவார். அங்கு தோனபவுலா எனுமிடத்திலே அரசாங்கஅதிகாரிகள்காத்துநின்று இராணுவமரியாதைகளுடன் அவரை வரவேற்பார்கள்.

2-ந்திகதி காலை 9 மணிக்குக் கருதினல் பிரதிநிதி ஆண்டவருக்கு அதிகாரபூர்வமான வரவேற்பளிக்கப்படும். போர்த்துக்கேயஇந்தியாவின் கவர்னர்—ஜெனறலும், கோவைப் பத்திறியாக்குஆண்டவரும், கத்தோலிக்க பிரமுகர் ஒருவரும், ஒவ்வோர்இந்து, முஸ்லீம் பிரமுகர்களும் வரவேற்புஉபசாரப் பேச்சுகள் நிகழ்த்துவார்கள். பிற்பகல் 3-30 மணிக்கு அர்ச். சவேரியாரின் திருமேனியை அடக்கியபேழை திறந்துவைக்கப்படும். சமயசம்பந்தமான கலைப்பொருட்காட்சித் திறப்புவிழா நடந்தேறும்.

3-ந்திகதி காலை 9-30 மணிக்குத் திருமேனிப் பேழையானது சக்கிறிஸ்தையிலிருந்து மகாலயத்துக்குச் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுபோகப்படும். அதனைத்தொடர்ந்துகருதினல் பிரதிநிதி ஆண்டவர் பெரியபாடற்பூசை நிறைவேற்றிப் பிரசங்கஞ் செய்வார். அதன்பின் மிஷனரிய மகாநாடுஒன்று மூத்தினங்களாக நடைபெறும். அதனைத் தொடர்ந்து மற்றும்வைபவங்களும் விமரிசையாக நடைபெற்று, அடுத்ததைமாதம் 3-ந்திகதி காலை பெரியபாடற்பூசை, பிரசங்கம் ஆதியவற்றுடன் அர்ச். சவேரியாரின் திருமேனிக்காட்சி முடிவாகும். கீழைத்தேசங்களின் பெரியஅப்போஸ்தலர் மரணமடைந்த நான்காம்நூற்றாண்டுவிழாவைத் தக்கவாறு கொண்டாடிப் பெரும்பலனெய்துமாறு புரட்டாசிமாதமுதல் திரிதினஉற்சவங்கள், ஞானத்தியானங்கள், ஏகாந்தஞானவொடுக்கங்கள்நடத்தித் தக்கவாறு தங்களைஆயத்தஞ்செய்து கொள்ளும்படியாய் விசுவாசிகளுக்கு ஆலோசனை கூறப்படுகின்றது.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மலாயா, தூரகிழக்குநாடுகள், பார்சீகக்குடா, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் யாத்திரிகர்களின் ஞானதேவைகளைக் கவனிக்குமாறு ஒவ்வோர் தனிப்பட்ட யாத்திரிகர்கள் கோஷ்டிக்கும் விசேஷ ஆராதனைவழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

திருமேனிக்காட்சியுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு கருமங்களையும் ஒழுங்காகநடத்துதற்கென்று பல்வேறு கம்மிற்றிகள் நிறுவப்படவிருக்கின்றன.



நமது யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள் திருநாமங்கொண்ட பெருநாள் நிகழும் ஆடிமாதம் 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வருகின்றதுஎன்பதை அவரின் ஞானமக்கள் அனைவருக்கும் ஞாபகமூட்டுகின்றோம். அன்று தினம் சகலரும்—விசேஷமாகப் பாடசாலைப்பிள்ளைகளும் தமக்காகப் பத்திபற்றுதலுடன் மன்றாடவேண்டுமென்று ஆண்டவர் அவர்கள் ஆசிக்கின்றார். அவர் சுகபலத்துடனும், தீர்க்காயுசுடனும், சிறந்தஞானத்துடனும் தமது ஞானமந்தையைச் சிறப்பாக ஆண்டுவரத் தக்கதாகத் தெரியலான திருவருட்பிரசாதங்களையெல்லாம் மழைபோல அவர்மேல் பொழிந்தருளுமாறு இறைவன் திருவடிகளை இரந்து கொள்ளுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் வேதசாட்சிகள்

இந்தியாவிலே அர்ச். சவேரியார் செய்த அற்புதங்களைத் தமதுஇனத்தவர்மூலமாய் அறியவந்த மன்னார்வாசிகள் தகுதியுள்ளவர்களான சிலரைத் தெரிந்து அவரிடம்அனுப்பித் தங்கள் மத்தியிலும் எழுந்தருளிவந்து வேதத்தைப்போதிக்க வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டார்கள். அப்போது நம்அர்ச்சியசிஷ்டர் வரமுடியாதபடியால், மன்னார்க் குடிகளின் வாஞ்சையைத்தீர்ப்பதற்காகப் பத்தியிலும், ஞானவைராக்கியத்திலும் சிறந்தவரும், தமதுநாமம் தரிக்கப்பெற்றவருமான பிரான்சீஸ்குச்சவேரியார் சுவாமியாரை அனுப்பிவைத்தார்.

சவேரியாராலே அனுப்பப்பட்டுத் தங்கள்நடுவேஎழுந்தருளிய சற்குருவை மன்னார்க்குடிகள் அன்பாய்ஏற்று, எல்லோரும்ஒருங்குகூடி அவருடைய சத்தியபோதனையைச் சாவதானமாய்க் கேட்டு இருதயபூர்வமாக விசுவசித்துச் சிறிதுகாலத்துள்ளே எழுநூற்றுக்கதிகமானோர் அவர்கரத்தாலேயே ஞானத்தீட்சைபெற்று உத்தமவிசுவாசிகளாய் மாறிவிடலாயினர்.

மன்னார்வாசிகள் பெருந்தொகையாய்க் கத்தோலிக்ககிறிஸ்தவர்களாயினபோதே அவர்கள் மத்தியில் இருந்துவந்த இந்துஆலயங்கள் ஒழிக்கப்பட்டு, விக்கிரகங்கள் நீக்கப்பட்டுப் போய்விட, இந்துமத வழிபாடெல்லாம் நின்றுவிட்டது. அப்போது பார்ப்பாராகஉள்ளவர்கள் மனம்சுழன்று, கோபாதிக்கராகி, அக்காலம் யாழ்ப்பாணத்தையும், மன்னார்துவீபத்தையும் ஆண்ட சங்கிலிஅரசனின் ஆஸ்தான மண்டபத்தை அடைந்து, “அந்நிய மதத்தவனாகிய ஒரு குரு வந்து, ஓர் புதுத்தெய்வத்தையும், புதுமதத்தையும் போதித்து, மன்னார்ப்பிரசைகளை மயக்கித் தனதுசமயத்தைத் தழுவச் செய்தாரென்றும், அவர்களை நீர்தண்டியாதுவிடில் தேவர்பழி உமக்குவருமென்றும் காரசாரமாக முறையீடு செய்தனர்.

இந்தமுறையீடு செவிக்கேறியதும் சங்கிலியாசன் பொங்கிக்கிழம்பிப் “பார்பார், ஒருகைபார்க்கிறேன்; பழிவாங்கித் தீருகிறேன்” எனக் கங்கணங் கட்டிநின்றான். அற்பகுற்றம் செய்தோரையும் நீதிவிசாரணையின்றிக் கொலைசெய்யுங் கொடியவன், மன்னார்ப் பிரசைகள் உயிரோடிருக்க மனம்சகித்திருப்பானோ? அவன் காலதாமதமின்றித் திருக்கேஸ்வரத்தில் சேர்த்த ஆயுதபாணிகளான 5,000 போர்வீரரை அணிவகுத்து அழைத்துக் கொண்டு மன்னார்த்துவீபத்திலே மரணதூதன்போலே பாளையம்இறங்கித் தாணையம்அடித்தனன்.

போர்வீரர் சங்கிலியனைத் தளபதியாகக்கொண்டு மன்னாருக்குவருமுன்னரே, அவர்கள்வருகையின்நோக்கம் வெளியாகிவிட்டது. இதை அறிந்த பிரான்சீஸ்குச் சவேரியார்சுவாமியார் காலதாமதமின்றிச்சகலகிறிஸ்தவர்களையும் ஒருங்குகூட்டி, அவர்கள் விசுவாசத்திலே பிரமாணிக்கமாயிருந்து கிறிஸ்துநாதருக்காகப்பிராணதியாகஞ்செய்தால் அனைவருக்கும் உடனுக்குடனே பரலோகசம்பாவனை தவறாதுசித்திக்கும் என்ற உண்மையை விளக்கிக்காட்டி அவர்களை வேதவிசுவாசத்திலும், நித்தியசீவிய நம்பிக்கையிலும் திடப்படுத்தினார்.

பயங்கொண்டசிலர் மாதோட்டமாதிய இடங்களுக்கு ஓடித்தப்பிவிட, மற்றப்புதியகிறிஸ்தவர்கள் யேசுநாதசுவாமிக்காகத் தங்கள் உதிரத்தைச் சிந்தவும், உயிரைக்கொடுக்கவும் முஸ்திப்புச்செய்துகொண்டிருக்கும்போது, சங்கிலியன் தனதுஇராணுவவீரரை நாற்றிசையும் அனுப்பிக் கிறிஸ்தவர்களைத் தேடிப்பிடித்துத் தன்முன் நிறுத்தும்படி கட்டளையிட்டான்.

வீரர்கள் எங்கும்திரிந்து எல்லோரையும்பிடித்துத் தோட்டவெளி என்ற இடத்தில் ஒன்றுசேர்த்தார்கள். சங்கிலியன் அவர்களைப்பார்த்து: “நீங்கள் கைக்கொண்ட புதுச்சமயத்தை மறுதலித்துப் பழையமதத்தை அனுஷ்டித்துப் பாரம்பரியமான தேவர்களுக்கு மீண்டுந்தொழும்பராக வேண்டுமென்று ஆஞ்ஞாபித்தான். தனதுகட்டளைக்கு அமையாவிடின் அனைவரையும் உயிர்வதைசெய்து எமபுரம் போக்கிவிடுவதாகவும் அச்சுறுத்தினான். அத்தருணம் நிகழ்ந்தகாட்சி எத்தன்மையாய் இருந்ததென்போம்? சவேரியாரென்னும் ஆயனும், அவரதுஞானமந்தையும் 5,000 இராணுவ ஓநாய்களாலும் சூழப்பட்டுச் “சங்காரமூர்த்தி” எனத்தகும் சங்கிலிஅரசன்முன்னே நின்ற காட்சி எத்துணைபயங்கரமானதென்போம்?

மற்றொருவகையாய் நோக்கின், அறுநூற்றுச்சில்வான அத்தனைவிசுவாசிகளும் விசேஷஞானவெளிச்சத்தினாலே பிரகாசம்அடைந்து, திடம்பெற்று, யேசுநாதசுவாமியாலும், வேதசாட்சிகளின் இராக்கினியாகிய தேவதாயாராலும், அவர்கள்பரிவாரத்தாலும் உற்றுநோக்கப்பட்டு நின்ற காட்சி ஓ! எத்தகைய மனோகரகாட்சியாக இருந்திருக்கவேண்டும்?

கிறீஸ்துநாதரின் தீர்க்கதரிசனம் நமதுநாட்டிலேயே, நம்மவருக்குள்ளேயே நிறைவேறுஞ்சமயம் நெருங்கிவிட்டது. “நமதுநாமத்தின்நிமித்தம் இராசாக்களுக்கும் அதிகாரிகளுக்கும் முன்பாக உங்களை இழுத்துக்கொண்டுபோய் நிறுத்தித் துன்புறுத்துவார்கள்.” “நமதுநாமத்தின்நிமித்தம் நீங்கள் சகலராலும் பகைக்கப்படுவீர்கள்,” “அவிசுவாசிகள் உங்களை உபத்திரவப்படுத்திக் கொலைசெய்வார்கள்,” ஆயினும் “உடலைக்கொல்பவர்களாயிருந்தும் ஆத்துமாக்களைக் கொல்ல இயலாதவர்களுக்கு அஞ்சாதீர்கள்.”

இத்திருவாய்மொழிகள் தங்களிலே நிறைவேறுவதை நம்முன்னோர் காணும்தருவாய் சமீபித்துவிட்டது! இதோ! வந்துவிட்டது!! ஒருங்கே திரண்டுநின்ற விசுவாசிகளைத் தனித்தனிமிரட்டிக் கேட்டபோது ஒருவரேனும் இருமனப்பட்டுத் தத்தளிப்புக் காட்டவில்லை. சத்தியநெறியில்நின்று சற்றேனும்இடறவில்லை. விசுவாசத்தை மறுதலிக்கத் துணியவில்லை.

நடுநீதியில்லாதசங்கிலியனின் சர்வாதிகாரப்பொறியிலே அகப்பட்டுநிற்பதையும், வேதத்தை மறுதலியாதஇடத்து வீரர்வாளுக்கு இரையாகப்போவதையும் அறிந்திருந்தும், மன்னார்ப் புதிய கிறிஸ்தவர்கள் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும், “யேசுக்கிறிஸ்துநாதரே ஏகமெய்த்தேவ இரட்சகரென்றும், அவர்போதித்தருளிய திருமறையே சத்தியமறைஎன்றும், அதைக் கைவிடமாட்டோம்என்றும் ஏகவாக்காய், ஏகசித்தமாய், ஞானக்காம்பீரமாய் உரைத்து விசுவாசஅறிக்கை செய்யலானார்கள்.

தன்பிரசைகள் தான்விதித்த ஆஞ்ஞையைஅவமதித்து, அச்சுறுத்திய மரணதண்டனையையும் மதியாமல்நின்றதைக்கண்ட கொடுங்கோலனான சங்கிலியன் கடுங்கோபத்தினால் நெஞ்சம்புழுங்கித் தனதுவீரரைவிளித்துச் சகல கிறிஸ்தவர்களையும் சங்காரஞ்செய்யும்படி கட்டளையிட்டான். யுத்தவீரர் அவன்கட்டளையைச் சிரமேற்கொண்டு கிறிஸ்தவர்களின்சற்குருவாகிய பிரான்சீஸ்குச் சவேரியார் சுவாமியாரும், மன்னார்ப் பட்டங்கட்டி அதிபராகிய இளையசிங்கமும், அவரின்கீழ்வாழ்ந்துவந்த புருஷர், பூவையர், வாலிபர், கன்னியர், பாலியர், பச்சிளம்குழந்தைகளும் உட்பட 700-க்கு அதிகமான பேரை 1544-ம் ஆண்டு தலைவேறு உடல்வேறாக வெட்டிச்சரித்தார்கள். தோட்டவெளியைச்சார்ந்த பட்டித்தோட்டமும், அயலூர்களும் பரிசுத்த வேதசாட்சிகளின்சிரங்களும், சிரங்கள் அகன்ற கவந்தங்களும் நிறைந்துதேங்கும் இரத்தக் களரிகளாக மாறிவிட்டன.

ஓ! பரிசுத்த வேதசாட்சிகளே! பாக்கியவாளரான வேதசாட்சிகளே!! பரலோகமகிமைவாய்ந்த வேதசாட்சிகளே!!! நீங்கள் பிராணபரித்தியாகிகளான தினம் இப்பூமண்டலத்திலே உங்களுக்கு ஆனந்த தினமாயிற்றே. பரமானந்தவாருதியிலே மூழ்கியிருக்கும்நீங்கள், பிரபஞ்சக் கண்ணீர்க்கணவாயிலே பிரலாபித்துநிற்கும் எங்களை மறவாது, உங்களுக்குஅருளப்பெற்ற விசுவாசத்திறமும், நம்பிக்கைத் திடமும், நேசப்பெருக்கும், நித்தியசீவிய கிரீடமும் எங்களுக்கும், எங்களைச் சூழ்ந்த பிறசமயவாதிகளுக்கும் அருளப்படுமாறு இடையறாது பிரார்த்தித்துவருவீர்களாக.

வேதசாட்சிகள் பக்தன்

## அர்ச். உத்தரியமாதா திருநாள் அல்லைப்பிட்டி

அல்லைப்பிட்டியிலே கோவில் கொண்டிருக்கும் அர்ச்.உத்தரிய மாதாவின் திருநாள் சென்ற 6-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவதினவிழாக்கள் நடைபெற்றுவருகின்றன. 15-ந் திகதி செவ்வாய்க்கிழமைமாலை கடைசி வேஸ்பர் ஆராதனையுடனும், மறுநாள் புதன்கிழமை காலை 7 மணிக்குப் பாடற்பூசையுடனும், அதன்மேல் உத்தரிய மாதா திருச்சுரூபத்துடன் சஞ்சுவானியார் திருச்சுரூபமும் கொண்டுசெல்லப்பெற்று நடைபெறும் சுற்றுப்பிரகாரத்துடனும் திருநாள்முடிவாகும். யாத்திரிகர்களுக்குச் சகலவசதிகளும் செய்யப்படும்.

S. A. ஞானப்பிரகாசம் சுவாமியார்
அல்லைப்பிட்டி

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திரு இருதயநாதரின் இரக்கத்தினாலும், திருக்குடும்பத்தின்தயவினாலும், பரிசுத்த பாத்திமா மாதாவினதும், அர்ச். அந்தோனியாரினதும், அர்ச். செபஸ்தியாரினதும் வேண்டுதலினாலும் எனது உத்தியோகம் தற்காலிகமாய் நிற்பாட்டப்பட்டிருந்து, குற்றங் குறை இல்லாது திரும்பவும் அதனைப்பெற்றுநடத்த உதவியளித்ததற்கு நன்றியாக நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமங்கள் புகழப்படுவதாக.

கொழும்பு ஏ. எஸ். பிள்ளை

## தெருவிபத்துகளும் பிள்ளைகளும்

சென்ற 1951-ம் ஆண்டிலே 20 வயதுக்குட்பட்டவர்களாய் 1,200 பேர் தெருவிபத்துகளில் கொல்லப்பட்டு, அன்றேல் காயமடைந்திருப்பதாகப் பொலிஸ்அறிக்கை தெரிவிக்கின்றது. இவர்களில் 935 பேர் பாதசாரிகள். ஏனையோர் அதிகமாகச் சைக்கிள்களிற் சென்ற பாடசாலைப்பிள்ளைகளாம். சென்றவருடத்திலே பன்னிருவயதுக்குட்பட்ட 868 பிள்ளைகள் தெருவிபத்துகளுக் குட்பட்டிருக்கின்றார்கள்.

## எஸ். எஸ். சி. பரீட்சை

சென்றசெவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிநடந்தேறும் எஸ். எஸ். சி. பரீட்சைக்குப் 11,500 மாணவர், மாணவிகள் சென்றிருக்கின்றார்கள். இவர்களில் 8,500 பேர் ஆங்கில எஸ். எஸ். சி. பரீட்சைக்கும், 2,500 பேர் சிங்கள எஸ். எஸ். சி. பரீட்சைக்கும், 500 பேர் தமிழ் எஸ். எஸ். சி. பரீட்சைக்கும் சென்றிருக்கிறார்கள். இவர்களெல்லாம் முன்னர்இப்பரீட்சையில் தோன்றியவர்கள்.

## மொழிபெயர்ப்புக் கலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குருமாரும் கேவலம் உயிரற்ற மொழி பெயர்ப்பைச்செய்யவில்லை. பழையஎபிரேய விவிலியத்தில், கிரேக்கவிவிலியத்தில், லத்தீன்விவிலியத்தில் எந்தஇனிமைகள்உண்டோ, அந்த இனிமைகளையெல்லாம் தமிழில்அப்படியே தந்திருக்கிறார்கள். கிறித்துவசமயத்தின் தத்துவமும் அப்படியேஇலகுவில் விளங்கத்தக்கவிதத்தில் அவர்கள் தம் மொழிபெயர்ப்பைச் செய்திருக்கிறார்கள். அதுமாத்திரமா? அவர்கள் தம் தமிழ் மொழிபெயர்ப்பில் தமிழ்மரபையும் கைவிடாது எபிரேய, உரோம, யூதப்பெயர்களை என்னஅழகாகத் தமிழாக்கியிருக்கிறார்கள் என்பதற்குச்சிலஉதாரணங்கள் காட்டுதும்:—

**Jew**— யூதன்
**Hebrew**— எபிரேயன்
**John**— யோவான்
**Anne**— அன்னம்மாள்
**Mathew**— மத்தேயு
**Apostle**— அப்போஸ்தலர்
**Centurion**— செந்தூரியன்
**Jesus**— யேசு
**Sebastian**— செவ்வேத்தியார்
**Jehovah**— யேகோவா
**Mary**— மரியநாயகி

இப்படியாக விவிலியத் தமிழ் ஆக்கத்தின் சிறப்பைப்பற்றி அடுக்கிக்கொண்டே போகலாம். எவரும்இலகுவில் கிரகிக்கத்தக்க முறையில், வாசிப்பவருக்கும் கேட்பவருக்கும் பக்தி யூட்டும் தன்மையில் இம்மொழிபெயர்ப்பு அமைத்திருக்கிறது. மொழிபெயர்ப்பென்பதை ஒருகலையாகக்கொண்டு அப்பணியில் ஈடுபடவிரும்பும் தமிழன்பர்கள் தமிழ்விவிலியநூலைப் படிக்க வேண்டும். வேட்டைவாளியானது தன் வயப்பட்டபுழுக்களைத் தன்மயமாக்குவதுபோலப் பழையகிறித்துவத் தமிழ்அறிஞர் வேற்றுமொழியில்இருந்தவிவிலியவேதத்தைத் தமிழனுக்கேஉரிய ஒரு வேதம் எனத் தக்கமுறையில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இப்பாதிரிமாரும், குருமாரும் வேற்றுநாட்டிற் பிறந்தவரேனும், வேற்றுமொழியினரேனும், தாம் மெய்ச்சமயம்எனக்கருதிய ஒருசமயத்தைத் தமிழ்மக்களுக்கிடையே பரப்புதற்காக, அத்தமிழர்க்கிடையே தமிழராக வசித்துத் தமிழைத்தமிழாகக் கற்றுத் தம்பணியில்இறங்கியவர்கள். மொழிபெயர்ப்புத்துறையில் இவர்கள் எமக்குவழிகாட்டிகளாக விளங்குகிறார்கள்என்று கூறினல் அதுமிகையாகாது. ....

## கம்யூனிஸமும் கிறீஸ்தவமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுக்கின்றது, கடவுள், வேதம், புண்ணியம் என்பதெல்லாம் பணக்காரர் கட்டிவைத்த கதைகள், அந்தப்பணக்காரரோடு இந்தக்கதைகளும் ஒழியவேண்டும் என்கின்றனர் கம்யூனிஸ்தர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் நிரபராதி

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

கல்நெஞ்சர்களான கைதிகள் கஷ்டப்படும்போது அவர் கனிந்தஉள்ளத்துடன் அவர்களது கண்ணீரைத் துடைத்தார். முதலில் வெறுப்புடன் நடத்திய கைதிகள் இப்பொழுது அவரைப்பேரன்புடன்கொண்டாடினார்கள்.

ஆண்டுகள் பலசென்றன. தமது நல்நடத்தையாலும், கைதிகளைக்காவல் காப்போரின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக்கொண்டதினாலும் சுவாமியாருக்குக் கஷ்டமான வேலைகளினின்றும் விதிவிலக்குக்கிடைத்தது. இனி அவர் சாகுமளவும் வேலையேசெய்யாமல் ஓய்வெடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். தாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த இந்தச்சலுகையைத் தமக்காகவே அவர் பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. அந்தத்தீவின் மற்றொரு பகுதியில்வாழும் குஷ்டரோகிகளுக்குச் சேவைசெய்யவிரும்பி அவர்களிடையேபோய் வசிக்க உத்தரவுபெற்றார்.

அங்கே கவனிப்பாற்று, சரியான சிகிச்சையற்று, அவயவங்கள் அழுகி, மேனி உருக்குலைந்து, உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தனர் அநேகர், வாழ்க்கையில்வெறுப்புக்கொண்டு,வேதனையினின்றும் விடுதலையடையச்சாவை எதிர்நோக்கியிருந்தனர். அத்தனை பேரும். அவர்களிடையே போய்ச் சேர்ந்தார் சுவாமியார். அவர்களுக்கு வேண்டிய சிகிச்சைகளைச்செய்தார். அவர்களுடைய ரணங்களைத்தாமே கழுவினார். அவர்களோடு உண்டு, உறங்கி வாழ்வதைத் தமது பாக்கியமெனக்கருதினார். தமது சுகத்தை மறந்து— இல்லை — தம்மையேமறந்து அயராது உழைத்துவந்தார்.

* * *

அங்ஙனமாக வழக்கம்போல் ஒரு நாள் ஒரு பிரான்சியகப்பல் சாத்தான் தீவுக்குவந்தது. கைதிகளோடு ஒரு குஷ்டரோகியும் பிரான்சிலிருந்து வந்திருந்தான். அவனுக்கு ரோகம் முற்றியிருந்தது. அவன் தேகம் ஒரே ரணமாயிருந்தது. அவனுக்குச்சாவு இன்னும் அதிகதூரத்திலில்லை என்று சொல்லும்படி இருந்தது.

அவனைக் கொண்டுபோய் ஒரு குடிசையில் வைத்தார்கள். சுவாமியார் உள்ளே சென்றார். அங்கே அதிக வெளிச்சமில்லை. இருந்தபோதிலும் அவர் நோயாளியின் ரணங்களைக்கழுவித் துணிகளால் சுற்றிக்கொண்டிருந்தார். அப்போது திடீரென அந்த நோயாளியிடமிருந்து கிளம்பியது ஒரு கோரமான கூச்சல். விரல்களே இல்லாத அகப்பைக்குச்சிபோலிருந்த தன் கைகளால் பக்கத்திலிருந்த சுவாமியாரைத் தள்ளுகிறான். சாந்தமே உருவான சற்குரு சாந்தமாகஅவனைத்தேற்றிக்கொண்டே திரும்பவும் அருகில் செல்கிறார்.

"இது யார்? பீற்றர் சுவாமியாரா? — இல்லை. அவராயிருக்க முடியாது— நிச்சயமாக அவர் அல்ல" — தீனக்குரலில் ஆச்சரியமும், பயமும்கலந்த பார்வையோடு நோயாளி கேட்கிறான்.

"ஆம். நான்தான் பீற்றர். என்னை உனக்குத் தெரியுமா? மகனே! நீ யார்?"

"சுவாமி, என்னை உங்களுக்குத் தெரியவில்லையா? நான்தான் ஜோண், உங்கள் தோட்டக்காரன்."

சுவாமியாரின்முகம் மாறுகிறது. சில விநாடிகள் கண்களை மூடிக்கொண்டு தியானத்திலிருக்கிறார். பழையநினைவுகள் — அந்தஇரவின்காட்சிகள் அலைபோல எழுகின்றன.

குஷ்டரோகி குமுறிக்குமுறித் தேம்பித்தேம்பி அழுகிறான். பக்கத்திலிருப்பவர்களை அருகே அழைக்கிறான். பேசுவதற்குத்தானும் இப்பொழுது அவனுக்குச் சக்தி இல்லை.

"நான் சாகப்போகிறேன். சாகுமுன் நான் சொல்லப்போவதைக் கேளுங்கள். 20 வருடங்களுக்குமுன் கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டு இந்தத் தீவுக்குவந்தாரே சுவாமியார் — அவர் நிரபராதி. அவருக்குப்பதிலாக இங்கு வந்திருக்க வேண்டியவன் நான்தான். நானேகுற்றவாளி— அவரல்ல.

நான் சுவாமியாரின் தோட்டக்காரன். மெத்தையிலே சுவாமியாரின் அறை. அதற்குக்கீழே என் அறை. ஓர் இரவு — நடுநிசி — அப்பொழுது மழைதூறிக்கொண்டிருந்தது. சுவாமியாரின் அங்கியையும், சப்பாத்துகளையும்திருடி நான் அணிந்துகொண்டேன். விதவையின் வீட்டைநோக்கிச்சென்றேன். அவள்வீட்டில் நிறையப்பணம் இருப்பது எல்லோருக்கும் தெரியும். அவள் யாருக்கும் கதவைத்திறக்கமாட்டாள். குருவானவரைக் கண்டால்தான் திறப்பாள். வீட்டை அடைந்ததும் கதவைத்தட்டினேன். யன்னல் வழியாக அங்கியைப்பார்த்துவிட்டுக் குருவானவர்என்றெநம்பிக் கதவைத் திறந்தாள்.

"என்ன சுவாமி! உடம்புக்கென்ன— ஏன் இந்தநேரத்தில்"........

அதற்குள் என்முகத்தைப் பார்த்துவிட்டாள். "ஓ"வென்று அவள் அலறுமுன் என்கைகள் அவள் கழுத்துக்குப் பாய்ந்தன. அவள்கூச்சலை அடக்குவதற்காகவே அப்படிச்செய்தேன். ஆனால், ஆத்திரத்தில்சற்றுப்பலமாகவே அவள்கழுத்தை நெரித்திருக்கவேண்டும். இரத்தம்பீறிட்டு என்மேலெல்லாம்அடித்தது. அவள் பிணமாகக் கீழேவிழுந்தாள்.

நான் பயந்துபோனேன். அங்கியையும், சப்பாத்துகளையும் தோட்டத்தில் புதைத்தேன். என்அறைக்குப் பதுங்கிப்பதுங்கிச் சென்றேன். அங்குசுவாமியார் நின்றுகொண்டிருந்தார். ஜோண் இந்த அகாலவேளையில் எங்கேபோய் இருந்தாய்?

என்னால் பேசமுடியவில்லை. நா குளறிற்று. பயத்தால் நடுங்கினேன்.

நான் ஏதோபாதகச்செயல் செய்திருக்கவேண்டும்என்று கண்டுகொண்ட சுவாமியார் என்னைஆலயத்துக்கு அழைத்துச்சென்றார். பீடத்துக்கு முன் முழங்காலிலிருந்தேன். அழ ஆரம்பித்தேன். சுவாமியார் ஆறுதல் சொன்னார். அவரிடம் பாவசங்கீர்த்தனம்செய்தேன். நடந்ததை நடந்தவாறு சொன்னேன். பாவமன்னிப்புக் கிடைத்தது. அவரது ஆசீர்வாதமும் பெற்றேன்.

மறுநாட்காலை நானே பொலிசரிடம் சரணடைவதென்ற முடிவுக்குவந்தேன். விடிந்தது. சரணடைந்தால் தூக்கிலிடப்பட்டுச் சாவது நிச்சயம். அப்பொழுது எனக்குவயது 25. சாகப் பிரியமில்லை.

பொழுது புலர்ந்ததும் பொலிசர்வந்தனர். சுவாமியார் கைதுசெய்யப்பட்டார். பாவிநான்—மாசற்ற அந்தக்குருவை மீட்க மார்க்கம்ஏதும் தேடவே இல்லை. எந்தநேரம் அவர் என்னைக் காட்டிக்கொடுத்து விடுவாரோஎன்று பயந்தேன்.—ஆனால், என் பாவசங்கீர்த்தனம் உடைபடா முத்திரையாகவே இருந்துவிட்டது.

மனிதனால் இயற்றப்பட்டசட்டம் என்னைத்தீண்ட முடியவில்லை. ஆனால், ஆண்டவன் சந்நிதானத்தில் நான் தண்டனையடைந்தேன். நான் குஷ்டரோகியானேன்.

பீற்றர் சுவாமியார் நிரபராதி. அவரை விடுதலைசெய்யுங்கள்."

* * *

குருவானவர் குற்றவாளியல்ல என்ற செய்தி பிரான்சிய அரசினருக்கு எட்டியது. ஆயுள்தண்டனை நீக்கப்பட்டது. சாத்தான் தீவிலிருந்து அவரைப் பிரான்சுக்குத்திரும்பி அழைத்துச் செல்ல ஒருகப்பல்வந்தது. விடுதலைபெற்று வீடுபோக — சிறையிலிருந்து சொந்த நாடுசெல்ல — பீற்றர்சுவாமியார் சம்மதிக்கவில்லை.

"நான்இங்கு வரவேண்டுமென்பது கடவுள்சித்தம். இங்கே என்சேவை மிகவும்தேவை. நான் சாகுமளவும் இங்கேயேஇருந்து தொண்டாற்றுவேன்" என்று சொல்லிவிட்டார். அவரை ஏற்றிச்செல்ல வந்தகப்பல் அவரில்லாமலே திரும்பிச்சென்றது.

---

கலாசாலை விழாவும்

## அதிபர் தினமும்

கொழும்புத்துறைம் ஆசிரியகலாசாலை அதிபர்தினமும், கலாசாலை விழாவும் கடந்த 5-7-52 சனிவாரம் ஆசிரிய மாணவர், மாணவிகளால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை 6-30 மணிக்குக் கலாசாலை அதிபர் வண. சுவாமி L. A. சிங்கராயர் அவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. அன்றையத்தினத்துக்கென விசேஷ விதமாகப் பேராசிரியை சங். சிஸ்றர் செயின்ற்பீற்றர், சங். விறதர் W. A. பெரேரு என்பவர்களால் நன்குபயிற்சியளிக்கப்பட்ட பாடகர்குழாம் இனிய கீதங்களால் அனைவரையும் பூசைவேளை பரவசப்படுத்தியது. பூசைமுடிந்ததும் பழைய ஆசிரியமாணவர், மாணவிகளும், பிறரும் அதிபரைச்சந்தித்து ஆசீர்வாதம்பெற்றனர்.

காலை 10-30 மணிக்குப் பேராசிரியர்கள், வண. தாயார், சங். கன்னியர்கள், சாதனைகழக ஆசிரியர்கள், மாணவர்கள், பழையஆசிரியமாணவர், மாணவிகள், பயிற்சிபெறும் ஆசிரியமாணவர், மாணவிகள் அனைவரும் ஒருங்குகூடி மகாவந். கியோமர் ஆண்டவரையும், அதிபர்சுவாமியாரையும் நன்கு அலங்கரிக்கப்பெற்றிருந்த கலாசாலை மண்டபத்துக்கு அழைத்துச்சென்று மாலைகள்சூட்டினர். அதிபர்மேல் ஆசிரியமாணவர், மாணவிகள் சோபனகீதங்கள்படித்தனர். ஆசிரியமாணவர் ஒருவர் வாழ்த்துப்பத்திரம் படித்து அளித்தனர். பின்னர் பழையஆசிரியமாணவர், மாணவிகள்இருவரும், பயிற்சிபெறும் ஓர்ஆசிரியமாணவியும் அதிபர்சுவாமியாரின் குணவிசேஷங்கள், திறமைகள், கத்தோலிக்கஆசிரியர்களின் வளர்ச்சிக்காக அவர்ஆற்றிவரும் அருந்தொண்டுகளை எடுத்துக் கூறி நன்றிதெரிவித்தனர். வண. தாயார்அவர்கள் பேசியபோது, ஆசிரியமாணவிகளுக்கும், தமக்கும், ஏனைய சகோதரகன்னியர்களுக்கும் வேண்டிய நேரங்களில் அதிபர்சுவாமியார் செய்துவரும் உதவிகளைஎடுத்துரைத்தனர். கடைசியாக அதிபர்பேசியபோது, கொழும்புத்துறையில் தாம்சேவைபுரிய மூதற்காரணமாகஇருந்தவர் மகாவந். கியோமர்ஆண்டவரேயெனக்கூறிக் கலாசாலையின் பல்வேறுவளர்ச்சிக்காகவும் நன்குஉழைத்துவருகின்ற வண. தாயார்முதல் சகலவர்க்கும் நன்றி தெரிவித்தார். தொடர்ந்துஇந்தவிழாவைச் சிறப்பிக்கப் பிறவிடங்களிலிருந்து சமுகம்அளித்த பழையஆசிரியமாணவர், மாணவிகளுக்கும், கலாசாலைவளர்ச்சியில் விசேஷபங்குஎடுத்துவருகின்றஆசிரியர் திரு P. A. சின்னப்புதம்பிராசா, சாதனைகழகத் தலைமைஆசிரியர், மற்றும்உதவிஆசிரியர்களுக்கும், பிள்ளைகளுக்கும் நன்றி கூறினார்.

கலாசாலைமண்டபத்தில் நண்பகல் நடைபெற்ற விருந்தில்அனைவரும் கலந்துகொண்டனர். அதன்முடிவில் பிறஇடங்களிலிருந்து தந்திமூலம்வந்து குவிந்த வாழ்த்துச்செய்திகள் வாசிக்கப்பட்டன. பிற்பகல் 3-30 மணியளவில் ஆரம்பமாகிநடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் நல்லூர், திருநெல்வேலி, பலாலி ஆசிரியகலாசாலைகளைச்சேர்ந்த ஆசிரியமாணவர், மாணவிகளும், கொழும்புத்துறை சாதனைகழக மாணவர்களும் கலந்துகொண்டனர். வெற்றிபெற்றவர்களுக்குப் பலவிதபரிசில்களும் பிறபோட்டிகளில் திறமைகாட்டிய கலாசாலைக்கழகங்களுக்கு வெள்ளிக்கிண்ணங்கள், வெற்றிச்சின்னங்களும் மகாவந். மேற்றிராணிஆண்டவராலே வழங்கப்பட்டன. யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள பலபிரமுகர்களும், கலாசாலை அபிமானிகளுக், ஆசிரியகலாசாலைகளின் அதிபர்களும், பலகுருப்பிரசாதிகளும், சங். கன்னியர்களும் சமுகம் அளித்து விழாவைச்சிறப்பித்தனர். எல்லார்க்கும் இனியசிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டு, மாலை 6-30 மணியளவில் ஆசிரியமாணவிகளால் அர்ச். ஜெனவீவ்என்னும் சிறந்தநாடகம் திறம்படநடிக்கப்பெற்று அதிபர் தினம் சிறப்பாகநிறைவெய்தியது.

A. F. J. செல்வத்துரை
ஆசிரியமாணவன்.

## நானாசங்கதிகள்

— தனது காலொன்றிலும், கையொன்றிலும் பாரிசவாதங்கண்டு வருந்திய 38 வயசுடைய இனிஸ் ஜோஸ்பெறேய்றாஎனும் போர்த்துக்கேயபெண் சில வாரங்களின்முன் பாத்திமாபதிசென்று அங்கு திருசேத்திரத்தண்டை முழங்காலால் நகர்ந்துபோய்ச் செபஞ்செய்து முடிந்ததும் அற்புதமாகக் குணமடைந்து தனதுகக்கதண்டங்களையும் அப்பாலெறிந்துவிட்டு எழுந்துநடந்தாளெனச் செய்திகிடைத்திருக்கிறது.

— கிறிஸ்தியன் பிறதர்மார்சபையை அடியிட்டவரும், ஆசிரியர்களின் பாதுகாவலருமான அர்ச். டிலாசால் அருளப்பர்பிறந்த மூன்றும் நூற்றாண்டுவிழா ஞாபகார்த்தமாகப் பிரான்சியஅரசாங்கம் பாவனைக்கு விடுத்த 25 லட்சம் புதியஇனத்தபால் முத்திரைகளும் ஏலவே விற்பனவாகிவிட்டமையால் 15 லட்சம் தபால்முத்திரைகள் திரும்ப அடித்துப் பாவனைக்கு விடப்பட்டிருக்கின்றன.

—12-ம்பத்திநாத பாப்பரசர் அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாம்சபையில் சேர்ந்துகொண்ட ஐம்பதாம்வருட பொன்யூபிலிவிழாவை ஞாபகப்படுத்துமுகமாக உலகமுழுவதிலும் பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபையைச் சேர்ந்துள்ளவர்களின் முப்பதினாயிரம் கூட்டங்களும் சமீபத்திலே ஒருநாளைச் செபத்தினதும், தருமத்தினதும் நாளாக அனுசரித்து அன்றுதினம் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கவிருக்கின்றன.

— இமையமலையிலே உலகின் மகா உன்னதமான எவறெஸ்ற்சிகரத்தின் உச்சிக்கேறமுனைந்த சுவிற்சர்லாந்தரின் கோஷ்டியானது அதன்உச்சியை அடைய இன்னும் 1,000 அடி இருக்கும்போது அப்பால் ஏறிக்கொள்ள முடியாமல் திரும்பிவிட்டது. என்றாலும் அக்கோஷ்டி வருகிறஐப்பசி அல்லதுகார்த்திகை மாசத்தில் இரண்டாம்முறையாக ஏறி அதனை ஓர்கைபார்க்க இருக்கின்றது.

— விடுமுறைகாலத்துக்கு உபயோகிக்கக்கூடிய நவீனமாதிரியான சைக்கிள்ஒன்றை எம். பொன்சே-குளோவின்எனும் பிரான்சியர் கண்டுபிடித்துக் கட்டியிருக்கின்றார். இது வளர்ந்தவர்களுக்கு ஏற்றது. தேவைப்படும்போது இதனைப் பாகம்பாகமாகக் கழற்றி உடுப்புப்பெட்டியில் வைத்துச் செல்லலாம். சமீபத்திலே இது பரீஸ் நகர காட்சிஒன்றில் வைக்கப்பட்டிருக்கிறது.

— அமெரிக்கஐக்கியதேசம் மற்றுமோர் நவமான இராட்சதவிமானம் ஒன்றைக்கட்டிப் பறக்கவிட்டுச் சமீபத்திலே பரிசோதனைநடத்தியிருக்கின்றது. இது "போயிங் வைபி—52" எனும் கோட்டைவிமானமாகும். இதன்நீளம் 153 அடி. சிறகின்நீளம் 185 அடி. வாலின்நீளம் 48 அடி. இது ஜே—57 ஜெற்எஞ்சின்களால் இயக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அன்பான தம்பிமாரே! தங்கைமாரே!

இந்த ஆடிமாதம் 20-ந் திகதி ஞாயிறுவாரம் உங்கள் அனைவர்க்கும் ஓர் சந்தோஷ தினம். அண்ணா ஏன் அவ்விதம் சொல்லுகிறார் என்று சிலவேளை நீங்கள் கேட்கலாம். அப்படி என்ன மறந்துபோய் விட்டீர்களா? எங்கள் ஞானஆயர் மகா வந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரின் பெயர் கொண்ட பெருநாள் அதுதான் அல்லவா? அவர் சின்னப் பிள்ளைகளாகிய எங்கள்மேல் என்றைக்கும் மிகுந்த அன்புஉள்ளவர். அதனால் நாங்களும் அவருக்குப் பதில்அன்பு காட்ட வேண்டும் பிள்ளைக்குரிய அன்புடன் நாங்களும் அவரை நேசிக்க வேண்டும் அல்லவா?

அவர் பிள்ளைகளாகிய எங்களை உத்தம கத்தோலிக்க பிள்ளைகளாக ஆக்கிவிட வேண்டும் என்று பெரும் ஆசை கொண்டிருக்கிறார். எங்களுக்கு நல்லஉலக கல்வியும், வேத கல்வியும் ஊட்டி வைக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டு உழைத்து வருகின்றார். நாங்கள் நன்றாய்ப் படித்து, நல்ல பிள்ளைகள் என்று பேர் எடுத்தால் அவர் மிகவும் மகிழ்ச்சி அடைவார். அதனால் நாங்கள் நன்றாய்ப் படிக்க வேண்டும். நல்ல பிள்ளைகளாய் நடக்க வேண்டும்.

இன்னும் எங்கள் ஞானஆயர் எங்களுக்குச் செய்துவரும் நன்மைக்காக நாங்கள் அவருக்கு நன்றி காண்பிக்க வேண்டும். காண்பித்து அன்று ஏதோ சிறு தெட்சணை ஒன்று அவருக்கு வைக்கத்தான் வேண்டும். அவர் விரும்பக் கூடிய தெட்சணை காசுபணம் அல்ல. ஆனால், அன்றுதினம் நாங்கள் எல்லாம் தமக்காக ஒன்றுசேர்ந்து நல்லாய் மன்றாட வேண்டும் என்றே அவர் விரும்புகின்றார். அன்று நாங்கள் எல்லாரும் போய் அவரைச் சந்தித்து, எங்கள் செல்ல மொழிகளால் அவருக்குச் சோபனஞ் சொல்ல முடியாது மெய். ஆனால், அவரை மனதால் சந்திக்கலாம். திவ்விய பூசைகண்டு, நன்மை பெற்று, சின்ன யேசுவை மன்றாடியும், செபமாலை முதலிய செபங்கள் செய்தும் அவைகளை எல்லாம் ஓர்ஞானப் பூஞ்செண்டாக அவருக்குத் தெட்சணை வைக்கலாம். அப்போது அவருக்கு ரொம்பச் சந்தோஷமாய் இருக்கும். அப்படியே செய்வோம் எனக் காத்திருக்கும்

உங்கள் அன்புள்ள
அண்ணா

## இல்லையே

(1) வாடிப்போன பூக்கள் மீண்டும்
வனப்புப் பெறுவ தில்லையே.
ஓடிப்போன நாட்கள் இங்கு
ஒன்றும் வருவ தில்லையே.

(2) செல்வம், இளமை, உடலம் மூன்றும்
செல்லும், நிலைப்ப தில்லையே.
கல்விக் கெல்லை உலகந் தன்னில்
கண்ட எவரும் இல்லையே.

(3) உண்மை ஞானிக் கெந்த நாளும்
உலக கவலை இல்லையே.
எண்ணும், எழுத்துங் கற்றிடாது
எமக்கு இன்பம் இல்லையே.

(4) பூவும் மணமும் ஒன்றை யொன்று
பிரிந் திருப்ப தில்லையே.
சாவை வென்று நின்ற யாரும்
சகத்தில் இல்லை இல்லையே.

"ஜெயம்"

## நான் குருவானால்

அர்ச். ஜோண் பொஸ்கோ தமக்குப் பத்துவயது ஆகுமுன்னரே தம்மைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய ஊழியத்தில் தம்மைமுழுதும் செலவழிக்கக் குருப்பட்டம் பெற வேணுமென்று ஆசைகொண்டு இருந்தார். இவர் ஆராவது ஒரு குருவானவரைக் கண்டால் ஓடிச்சென்று அவருக்குத்தோத்திரம் சொல்லி அவர்பிறகே சற்றுத்தூரம் செல்லுவார். குருவானவர் தம்மைக் கவனியாமல் அப்புறம் சென்றால் விசனத்துடன் வீடு திரும்புவார். ஒரு நாள் ஜோண் பொஸ்கோ ஒரு குருவானவர் வெகு தூரத்தில் வரக்கண்டு ஓடிச்சென்று அவருக்குத் தோத்திரம் சொன்னார். அப்போது அந்தக் குருவானவர் அவரைச் சட்டைபண்ணாது தம் வழியே சென்றார். இது அவருக்குத் தாங்கமுடியாத கவலையைக் கொடுத்தது. உடனே வீட்டிற்குச்சென்று தமது தாயிடம் நடந்த விஷயத்தைக் கூறி அழ ஆரம்பித்தார்.

தாய்—மகனே, அவர் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்? அவர் ஒரு நல்ல குருவானவர். அவர் மனம் முழுவதும் கல்வியிலும், மேலான யோசனையிலும் சென்றிருக்கும். உன்னைப் போன்ற சிறுவருடன் பேச அவருக்கு நேரங்கிடைக்குமா?

மகன்—என்ன அம்மா, என்னோடு ஒரு நிமிஷம் நேச வார்த்தைகள் பேச அவரால் முடியாதா?

தாய்—அவர் உனக்கு என்ன சொல்லக்கூடும்? நீ இவ்வளவு சிறியவனாய் இருக்கிறாயே. அவர் பேசுவதை உன்னால் கண்டு பிடிக்கக் கூடுமா?

மகன் — அம்மா, என்னால் கூடும். அவர் மாத்திரம் என்னிடம் ஏதாவது நேசவார்த்தைகள் சொல்லட்டும். நிச்சயமாய் நான் கண்டு பிடிப்பேன்.

தாய் — சரிதான், மகனே! ஆனால், அவருக்கு எவ்வளவு வேலை இருக்கிறது. பூசை செய்ய வேண்டும். பாவசங்கீர்த்தனம் கேட்கவேண்டும். பிரசங்கம் தயார் செய்ய வேண்டும். இவை மாத்திரமா? அவருக்குத் தமது விசாரணைப் பங்கைச் சேர்ந்த பல கவலைகளும் இருக்கும்.

மகன்—சிறுவர்களும் அவர் விசாரணைப்பங்கில் சேர்ந்தவர்கள் தானே. அவர் எங்களையும் பாதுகாக்க வேண்டாமா?

தாய்—மெய்தான் கண்ணே! ஆனால், அவருக்கு நேரம் இல்லையே அப்பா. எப்படி உன்னோடு வீண்காலம் போக்குவது?

மகன்—என்னோடு பேசுவது வீண்காலமா? அப்படியானால் நமது ஆண்டவர் சிறுவர்களை ஆசீர்வதித்து அவர்களுடன் பேசிக்கொண்டு இருந்தபோது வீண்காலந்தான் போக்கினாரா?

தாய் — ஆம், நீ சொல்வது நியாயந்தான் என்று சொல்லி வேறு யாதேனும் சொல்லத் தோன்றாது திகைத்தபோது...

மகன்—"நான் மட்டும் ஒரு நாள் குருவானால் சிறுபிள்ளைகளுக்காக என் உயிரை விடுவேன். சிறுவர்களை என்னிடம் அழைத்து அவர்களை நேசிப்பேன். அவர்களும் என்னை நேசிக்கும்படி செய்வேன். அவர்களுக்கு நற்புத்தி புகட்டி அவர்களுக்கு உதவி செய்து அவர்களுடைய ஆத்துமங்களின் இரட்சணியத்திற்குக் காரணமாய் இருப்பேன்" என்று பிள்ளைக்குரிய பிடிவாதத்துடன் கூறினார்.

அவரும் ஓர் குருவானார்—சிறுவர்களுக்காக — ஏழைச்சிறுவர்களுக்காக — அநாத சிறுவர்களுக்காகத் தம் உயிரைச் செலவழித்தார். ஏழைகளின் அழுகைக் குரலைக் கேட்டார். அவர்கள் துன்பத்தை நீக்கினார்.

A. யோசேவ்

## ஆடிமாதம்

ஆடிமாதம் சூரியனின் வெப்பம் சிறிது சிறிதாகத் தணியத் தொடங்கும் மாதம். அங்கும் இங்குமாக மழைத் துளிகள் விழுந்து வரண்டு கிடக்கும் பூமியைக் குளிரச் செய்யும் மாதம். "ஆடி மழை தேடிவிதை" என்றபடி, கமக்காரர் தங்கள் நிலத்தை உழுது பண்படுத்தி விதைத்துச் சுறுசுறுப்புடன் உழைக்கும் மாதம்.

இம்முறை வந்துபோன ஆடித்திருநாளுக்கு எங்களை மடுவுக்கு அழைத்துக்கொண்டு போகும்படி என் தகப்பனாரைக் கேட்டேன். அவர் என்னை நோக்கி, மருதமடுவில் ஆடி மாதம் 2-ந் திகதி கொண்டாடப் படும் திருநாள் என்ன என்று கேட்டார். அதற்குச் சரியான விடை இறுக்காதபடியால் இம்முறை மடுவுக்கு எங்களை அழைத்துப்போக முடியாது என்று சொன்னார். மறுமுறையும் இப்படிச் சம்பவியாதபடி, அத்திருநாளைப் பற்றி அம்மாவிடம் வினாவினேன். அவசொன்னா:

ஆடி 2-ந் திகதி தேவமாதா எலிசபேத் அம்மாளை வினவிய திருநாள் என்று. தேவமாதா கபிரியேல் என்னும் தேவதூதனால் மங்கள வாழ்த்துக் கூறப்பட்டுக் கர்ப்பம் தரித்தபின் ஸ்நாபக அருளப்பரின் தாயாரான எலிசபேத் அம்மாள் தேவமாதாவுக்கு நெருங்கின பந்து. எனினும் சரீர உறவைப் பார்க்கிலும் ஆத்தும உறவே அவர்களுள் அதிகமாய் விளங்கியது. இப்பூவையர் இருவரும் ஒருவரை ஒருவர் சமீபகாலத்தில் சந்தியாதுவிட்டாலும், ஒருவரின் விசேஷம் மற்றவருக்கு மறைவாக இருக்கவில்லை. எலிசபேத் அம்மாள் நெடுங்காலம் பிள்ளைப் பாக்கியம் இன்றி மனம் வருந்தினாள். கடைசியாக முதிர்வயதில் கர்ப்பம் தரித்திருக்கிறாள் எனக் கபிரியேல் சம்மனசுமூலம் தேவமாதாவுக்குத் தெரிய வந்தது. அப்போது அவ அன்பினால் ஏவப்பட்டு எலிசபேத் அம்மாளுக்கு உதவி செய்வதற்காக "அயின்கரீம்" என்னும் ஊரிலே அவள் வசித்திருந்த வீட்டை அடைந்து அவளைச் சந்தித்துச் சோபனங் கூறியபோது "ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே, உமது திருவயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப் பட்டதாமே, ஆ! என் ஆண்டவரின் தாயார் என்னிடம் எழுந்தருளிவர நான் யாது தவம் புரிந்தேனோ? என உரத்த சப்தமாக உரைத்து உபசரித்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள். அப்போது தான் தேவமாதா என் ஆத்துமமானது ஆண்டவரை வணங்கித் தோத்திரம் பண்ணுகின்றது. என் இரட்சணியமாகிய சருவேசுரனிடத்தில் என்மனம் எழும்பி மகிழ்கின்றது........ என்று தொடங்கும் பத்துவாக்கியங்களைக் கடவுளைப் புகழ்ந்து பாடினா. இச்சம்பவத்தையே இத்திருநாள் ஞாபகப்படுத்துகின்றது. இதிலிருந்து சற்சனர் சகவாசம் சாலச் சிறந்தது என்றும், சர்வேசுரன் சதா ஸ்துதிக்குரியவர் என்றும், ஒருவரை ஒருவர் சந்திக்கையில் சருவேசுரனுக்குத் தோத்திரம் புரிதல் நல்லது என்றும் கற்றுக் கொள்ள வேண்டும்என அம்மா சொன்னா. மறுமுறை மடுத்திருநாள் வரும்போது தகப்பனார் மறுபடியும் அந்தக் கேள்வியை என்னிடம் கேட்டால் சரியான விடை கொடுப்பேன். அப்போது அவர் எங்களை மடுவுக்கு அழைத்துக் கொண்டு போவாரா? இல்லையா?

Segaram Amirthanather

— வத்திக்கான் இராச்சியத்தைப் பரிபாலிக்கும் பாப்பரசாது கம்மிஷனின் காரியதரிசியாக இருந்துவந்த மொன்சிஞ் பிறிமோ பிறின்சிப்பி அவர்கள் அர்ச். பேதுருவானவர் மகாலய திருச்சங்க காரியதரிசியாக நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார். அர்ச். பேதுருவானவர் மகாலயத்தைப் பாதுகாத்துப் பரிபாலிக்கும்பொறுப்பு இவருடையதாகும்.

—இரண்டாவது உலகயுத்தம் நடைபெற்ற காலத்திலே கடலில்ஆழ்த்தப்பட்ட சிங்கப்பூரின் கப்பல்பழுதுபார்க்கும் தொட்டியைக்கொண்ட மிதவைக் கப்பலானது அநேகமாய் இவ்வருடத்திலே கடலிலிருந்தும் மிதக்கப் பெற்றுப் பிரித்தானிக்கு இழுத்துக்கொண்டு போகப்படுமென லண்டனிலே கடற்படைக்காரியாலயம் அறிவித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## அமெரிக்க கொள்கை

— டென்வர்

பரஸ்பரபாதுகாப்பை உருவாக்குவதில் ஏனையசுதந்திர தேசங்களுடன் உத்வேகமும், தீவிரமும் நிரம்பியமுறையில் ஒத்துழைப்பதே அமெரிக்காவின் வெளிநாட்டுக்கொள்கையாக இருக்க வேண்டும்என்று ஜனாதிபதிபதவிக்குத் தேர்தலில்போட்டியிடக் குடியரசுக் கட்சியின் நியமனத்தைஅபேட்சிக்கும் ஜெனறல் ஈசன்ஹேவர்அவர்கள் தமது கருத்தைத் துலக்கமாகச் சொல்லிவருகிறார். அவரது முக்கியமான நான்கு அம்சங்கள் வருமாறு:

(1) சமாதானத்தை நிறுவுவதில் அமெரிக்காவின் அந்தரங்கசுத்தத்தை ஒவ்வொருநாடும் புரிந்துகொள்ளுகிறது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

(2) ஐ. நா. ஸ்தாபனத்துக்குப் பக்கபலமாகஇருப்பதில் வழவழா ஆக இருக்கக்கூடாது. வடஅத்திலாந்திக் கூட்டாளிகளுக்கும், ஆசியமக்களுக்கும் உறுதியானஆதரவு வழங்கிவர வேண்டும்.

(3) அமெரிக்கா தனதுகொள்கைகளை "அப்படிஇல்லை, இப்படிஅல்ல" என்று சொல்லாமல் இதுஇப்படிஎன நேர்முகமாகச் சொல்லவேண்டும்.

(4) அமெரிக்கா தனது சுதந்திர தேசக் கூட்டாளிகளுடன் புஜபலத்துடனும், மனோபலத்துடனும் நிமிர்ந்துநின்று ஆயுதபாரத்திலிருந்து உலகைவிடுவிக்கக் கம்யூனிஸ்தமாஸ்றர்களுக்கு "நடைமுறைக்குத்தக்க நேரியதிட்டத்தை"ச் சமர்ப்பிக்கும் நாளை எதிர்நோக்கி நிற்கவேண்டும்.

## சோவியற் அடிமைத்தனம்

—ஐ. நா. ஸ்தா. நியூயோக்

வலுக்கட்டாயமாக ஆட்களைத் திரட்டுவது, சோவியற்பொருளாதார நிர்வாகத்தில் இன்றியமையாததோர் அம்சமாக இருந்துவருகிறது என்று ருஷியாவில்பிறந்த தொழில் நிபுணர் திரு. டேவிட் ஜே. டாலின் அவர்கள் அன்று ஐ. நா. ஸ்தாபன கம்மிற்றியிடம் தெரிவித்தார். இந்தக்கம்மிற்றியானது கட்டாய, அல்லது அடிமை வேலை முறைபற்றி விசாரணைநடத்தி வருகிறது. இரும்புத்திரை நாடுகளிலிருந்துவரும் அகதிகளை விசாரித்துப் பார்த்தே தாம்இந்தமுடிவுக்கு வந்திருப்பதாகத் திரு. டாலின்கூறினார். அவர்மேலும் குறிப்பிட்டதாவது:

சோவியற்ருஷியா மக்களை அடிமைகளாகத்திரட்டி அவர்களிடமிருந்து கட்டாயவேலை வாங்குகிறது என்பது வெறும்பிரசார மொழிகளல்ல. அவ்விடத்துநடப்புக்களைக் கவனிக்கும்போது இதுஉண்மைஎன்பதை யாவரும் அனுமானிக்கமுடியும். தற்போதைய சோவியற்அரசாங்கம் ஒருநாளும் அடிமைத்தொழிற்திட்டத்தைக் கைவிடவேவிடாது. அதனால் கைவிடவே முடியாது. மக்களைஅடிமைப்படுத்தி வேலைவாங்கித்தான் அது பிழைக்கிறது. தன்னுடையமானமே கப்பலேறினாலும்சரி, அதனால் பெரும் ஆபத்தே வந்தாலும்சரி, அடிமைத் தொழில் திட்டத்தைமட்டும் ருஷியா கைவிடாது என்றஎண்ணம் திண்ணமாக எனக்குஉண்டாகியிருக்கிறது.

சோவியற்நாட்டிலே ஒருகோடிக்கு மேற்பட்டவர்கள் அடிமைத்தொழிலாளிகளாக அவதிப்படுகின்றனர் என்ற எழுத்துமூலமான அத்தாட்சி சரியே என்று அவர் அபிப்பிராயப்பட்டார்.

கம்மிற்றியின்முன் சாட்சியம் அளித்த எஸ்தோனியர்கள் இருவர், அடிமைத்தொழிற்கூடங்களில் கம்யூனிஸ்தர்கள் மக்களைமாக்களாக நடத்தும்விதத்தை விவரித்தார்கள். இவர்கள் இருவரும் அடிமைத்தொழிற் கூடங்களிலிருந்து தப்பிவந்தவர்கள். இரண்டுஇரவில்மாத்திரம் 14,000 எஸ்தோனியர்கள் சோவியற் அடிமைத் தொழிற் கூடங்களுக்குக் கடத்தப்பட்டனரென்று இவர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். "அடிமைத்தொழிற்கூடங்களில் சாப்பாட்டுக்குறைவினாலும், சுகாதாரக்குறைவினாலும், ஆனால் வேலைமட்டும் இடுப்பொடிய நாளுக்குப் 12 மணிநேரம் வாங்கியதனாலும் தினசரி 35 பேர்விகிதம் எஸ்தோனியர்கள் மாண்டனர். எஞ்சியவர்கள் எலும்புந் தோலுமாக இருந்தனர்" என்று இவ்விருவரும் எழுத்துமூலம் பிரமாணம் செய்துகூறினார்கள்.

## தொழிலாளர் சுயேச்சை

— புதுடில்லி

முழுதும்தன்னிஷ்டமாகச் சேர்ந்து வேலைசெய்யும் அடிப்படையிலே இந்தியாவின் அளப்பரிய ஆட்பலத்தைத் தேசநிர்மாணத் திட்டங்களுக்கு உருப்படியானமுறையில் ஈடுபடுத்த இந்திய அரசாங்கம் செய்துள்ள தனது ஏற்பாட்டை அறிவித்துள்ளது. பிரதமர் நேரு அவர்கள் இந்தஏற்பாட்டை வெளியிட்டுள்ளார். அதன்பிரகாரம் தொழிலாளிகளுக்குப் பரிபூரண சுயேச்சை வழங்கப்படும். இது மிகவும்முக்கியமானது. பிடிக்காதவேலையில் யாரையும்பலாத்காரமாக ஈடுபடுத்தும்உத்தேசம் இலவலேசமும்இல்லை. இதுகுறிப்பாகக் கம்யூனிஸ்தபலாத்கார தொழிற்திட்டத்துக்கு நேர்எதிரிடையானதுஎன்று இந்தியஅதிகாரிகள் கருதுகின்றனர்.

தொழில்நிர்மாணத் திட்டம்என்றால் வலுக்கட்டாயமாக ஆட்களை வேலைக்குத்திரட்டுவது என்றஎண்ணம் சர்வாதிகாரஆட்சிகள் செய்வதைப்பார்த்து ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் திட்டம் அப்படிப்பட்டதல்ல. இஷ்டவிரோதமாக எவரையும் வேலைவாங்கும்எண்ணம் கிடையாதுஎன்று இந்தியஅரசாங்க பிரசுரத்தில் திட்டக்கம்மிஷன் அங்கத்தினர் குல்ஸாரிலால் நந்தா குறிப்பிடுகிறார். இப்பிரசுரத்துக்கு வரைந்துள்ள முன்னுரையில் நேரு சொல்லுகிறார்: "சேர்ந்துசெய்யும் பொதுவானவேலையில் நாம் சமபங்காளிகளாக, தோழர்களாகக் கடமையாற்றவேண்டும்."

## கம்யூனிஸ்தர்களின் சூதுவாது

— ரோக்கியோ

கோணல்வழியிலே பொதுமக்களுக்கு ஆவேசமூட்டிக் கருத்தைச் சிதறடிக்கும் ஸ்ராலினியகம்யூனிஸ்தர்களின் சூதுவாதுகளைப் பிரபல அமெரிக்க சோஷலிஸ்ததலைவர் நோர்மன் தோமஸ் மிகவும்வன்மையாகக் கண்டித்துக் கூறுவதாவது: "ஆசியமக்கள் அமெரிக்கரைப்பற்றிச் சாதகமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களா? அல்லது பாதகமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களா? என்பதுபற்றி நான் ஆதங்கப்படவில்லை. ஆனால் எனது கவலையெல்லாம் ஸ்ராலினிய கம்யூனிஸத்தின் உண்மையைக் காலாகாலத்தில் ஆசியர்கள் உணர்கின்றனரா என்பதுவே.

"செக்கோசிலவாகியாவின் ஜனாதிபதியாகவிருந்த எட்வாட் பீனஸ்அவர்களையும், மற்றொருதலைவர் ஜோண் மசாறிக்அவர்களையும் எனக்குச் சிநேகிதமுறையில் நன்றாகத்தெரியும். கம்யூனிஸ்தர்களைஎப்படியும் சமாளித்துவிடலாம்என்று அவர்கள்நிச்சயமாக நம்பிக்கொண்டிருந்[illegible] நானும் அப்படி[illegible] எண்ணினேன்என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். அவர்களை ஒரு மாதிரியாக இழுத்துக்கொண்டு போகலாம்என்று எண்ணியதை நான்மறுக்கவில்லை. அவ்வாறு எண்ணியதன் தவறைப் பின்னர்உணர்ந்தேன்.

"கம்யூனிஸ்தர்கள் சமய சந்தர்ப்பத்தைஒட்டி 'ஐக்கியமுன்னணி'என்ற பேச்செடுப்பார்கள். செக்கோசிலவாகியாவில் அதேதந்திரத்தை அவர்கள் கையாண்டனர். ஆசியாவிலும் அதேதந்திரத்தில் அவர்கள்இறங்குகிறார்கள். முதலில்அவர்கள் உள்ளே நுழைந்துகொள்ளுகிறார்கள். பிறகு 'இடத்தைக்கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவார்கள்.' கம்யூனிஸ்தர்கள் அறவேநம்பத்தகாதவர்கள். அவர்கள் பேச்சில் நாணயம்கிடையாது. குழப்பம்விளைவித்து அந்தச்சந்தடியில் அதிகாரத்தைக்கைப்பற்றுவதே அவர்கள் இதுவரைசெய்துள்ள தொழில்."

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சேன் வின்சேன்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

கோச்சிக்கடை:— கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாருடைய சலுகையால் யான்கோரியபடி எனதுபேறுகாலம் அனுகூலமானபடியால், நன்றியாக அவரின் ஏழைகளுக்குக் காணிக்கையாக ரூபா 10 அனுப்பி, எங்கள்குடும்பத்தைத் தேவன் மேன்மேலும் ஆசீர்வதிக்கும்படி சபையார் வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எம். பிரான்சீஸ்கா

சூராவத்தை:— நான் நற்கதி அடையும்படியாக அர்ச். அந்தோனியாரின் ஏழைகள்தருமஅப்பத்துக்குக் காணிக்கையாக ரூபா 10 அனுப்பியிருக்கிறேன்.

எஸ். தங்கச்சிப்பிள்ளை

புத்தளம்:— கோடியற்புதரும், ஏழைகளின் பாதுகாவலருமான அர்ச். அந்தோனியாரின்சலுகையால் எனது வேண்டுதல் அனுகூலமானது. நேர்த்திப்படி காணிக்கைஅனுப்பி இதைப் பிரசுரிக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எம். பி. இராசரட்ணம்

நீர்கொழும்பு:— திருஇருதய ஆண்டவரின் இரக்கத்தினாலும், பொம்பேயி செபமாலைஇராக்கினிமாதா—பாத்திமா மாதாவின் உதவியினாலும், அர்ச். சூசையப்பர், சங். அல்போன்சா சகோதரி, அர்ச். நிக்குலாவு முனீந்திரன், அர்ச். பிரான்சீஸ் அசீசியார், .அர்ச். யூதாததேயு, முத். மாட்டின் டே பொறஸ், யேசுவின் சிறிய புஷ்பம், கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார் இவர்களதுமன்றாட்டினாலும் எனதுசகோதரனுக்கு உண்டான எலும்புமுறிவும், எனதுமகனுக்குண்டான விஷசுரமும் குணமடைந்தன. இன்னும் என் குடும்பத்திலுள்ள தொந்தரவுகள் நீங்கவும், என்மகனுக்குள்ள ஆஸ்மா குணமடையவும் உதவிபுரிவார்களாக. இவர்கள்நாமங்கள் எங்கும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். ஏழைகளின் அப்பத்திற்காக ரூபா 2 அனுப்பியுள்ளேன்.

ஹரியட் பீரிஸ்

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

நாத்தாண்டி: பி. பெர்னாண்டோ 6-00, வி. டி பி. பெறேரு 2-00—நீர்கொழும்பு: மேரி லோரு பெர்னாண்டோ 1-00— சிங்கப்பூர்: பி. ஏ. பொன்னுத்துரை 5-00 — கேகாலை: ஜி. எஸ். சின்னத்துரை 1-00— கல்கமுவா: ஏ. மரியாம்பிள்ளை 2-00, வி. பெஞ்சமின் 2-00, எஸ். கிறகோரி -50, வி. எஸ். சூசைப்பிள்ளை 1-50, ஏ. சுவாம்பிள்ளை 3-00, எம். சந்தியாப்பிள்ளை 1-00, வி. சந்தியாப்பிள்ளை 2-00, ஏ. மரியானாள் 1-00, ஏ. பாவிலுப்பிள்ளை 1-00, வி. சந்தியா 1-00 — முள்ளிக்குளம்: எல். அருளம்மா லேனா 3-00, மிசெஸ். எம். சந்தியா சில்வா 1-00, எஸ். மரியமிராந்தா 2-00— சூராவத்தை: எஸ். சின்னத்தங்கம் 3-00—அக்கரபற்றன: எச். ஆர். சில்வானுஸ் 5-00 — கரவெட்டி: எஸ். பஸ்ரியாம்பிள்ளை 2-00, பி. கபிரிகேற்பிள்ளை 1-00—நனூஓயா: எம். எஸ். பொன்னையா 2-00--வவுனியா: பி. ஏ. சிறில் 1-00—மஸ்கேலியா: செபஸ்தியம்மாள் 5-00—யாழ்ப்பாணம்: டி. நீக்கிலாஸ் 1-00, பிரான்சீஸ் சிதம்பரப்பிள்ளை 1-50, ஏ. பிரான்சீஸ்பிள்ளை 6-00 — பாஷையூர்: மூப்பர் லேனா 1-00, மூப்பர் செயம்மா 1-00, மடுத்தீன் எலிசபேத் 2-00, பேர்னாட் யோசேப் 1-00, தவிது பாவிலு 2-00 — மலாயா: எஸ். ஜே. யோசேப் 6-60—சீனன்குடா: தோமஸ் மோசேஸ் 2-00—அம்பிற்றியா: ஏ. எல். விக்றர் -50 —கேகாலை: ஏ. யுவக்கீன் 5-00—சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00 — முந்தல்: எம். அந்தோனிப்பிள்ளை 3-00, ஏ. சந்தியோகு 4-00—புத்தளம்: எம். பி. இராசரட்ணம் 2-00 — கற்பிட்டி: எஸ். மரியாம்பிள்ளை 2-00—கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 3-00 — கருக்குப்பனை: டபிள்யூ. எம். பெர்னாண்டோ 4-00 — பசறை: பிலிப் அந்தோனி 2-00 — பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 2-50, மரியரேஸ் பீற்றர் 3-00—வட்டகொட: எஸ். யோண் 10-00—இல்லா: எஸ். வி. பீற்றர் 1-00—கல்இல்லா: ஏ. எல். சைமன் 3-00 டிப்போடிரு: பி. எவ். சூசைப்பிள்ளை 1-00—பம்பலப்பிட்டி: பி. ரி. சலமோன் 2-00 — மடுல்கலை: கே. எஸ். டானியல் 3-00 — வேப்பங்குளம்; கே. சின்னப்பு 1-50—திரிகோணமலை: எம். பெர்னதேத் 2-00, என். மனவல் 2-00 — கொச்சிக்கடை: பி. எஸ். ரி. 5-00 — இலுப்பைக்குளம்: எம். அந்தோனி -50—கொச்சிக்கடை: எம். பிரான்சீஸ்கா 10-00.

| | |
|---|---|
| The Director,<br>St. Joseph's Conference.<br>Bishop's House.<br>JAFFNA. | சேன் வின்சேன்ற் டீ போல்சபைத்தலைவர்<br>மேற்றிராசன மாளிகை<br>யாழ்ப்பாணம். |

## நேர்த்தியின் பூர்த்தி

முத்திப்பேறுபெற்ற பத்தாம்பத்திநாதரை வேண்டிக்கொண்டதினால் எனது மகனுருக்கு ஏற்பட்ட கடும் வருத்தம் குணமடைந்தது. அதன்நேர்த்தியாக, நான் வாக்குப்பண்ணியபடி அவருடைய அற்புதத்தைப்பத்திரிகைமூலம் பிரசுரிக்கிறேன்.

பாஷையூர் க. யோ. சே.

— அமெரிக்க ஐக்கியதேச பப்ரிஸ்ற்புரொட்டஸ்தாந்த மகாநாடு சமீபத்திலே சிக்காகோநகரில் கூடியபோது, அதிலே பரிசுத்தஸ்தானத்தினிடமாக அமெரிக்க ஸ்தானீகர்ஒருவரை அனுப்பும் விஷயமாய்த் தனதுபழைய எதிர்ப்பைப் புதுப்பித்து ஓர் பிரேரணையை அரங்கேற்றியிருக்கின்றது.

**JUNIOR SCHOOL CERTIFICATE EXAMINATION, NOV. 1952**

*(Conducted by the Examination Council of the Northern Province Teachers' Association)*

Closing date for entries of Private Candidates: **1st Aug. '52**

Closing date for entries of School Candidates: **25th Sep. '52**

*Apply for entry forms to:—*

**T. Seenivasagam,**
*Secretary,*
N.P.T.A. Examination Council,
23, Kannathiddy Road, Jaffna.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 10-1952.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org